# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 20 செவ்வாய்க்கிழமை (06-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:345


# பயணத்துக்குப் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை உடனடியாக நீக்கப்படுகின்றது!

## ஈ.பி.டி.பி. அறிவிப்பு

கொழும்பு,நவ.6

யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான போக்குவரத்துக்கு, பாதுகாப்பு அனுமதி பெறவேண்டும் என்ற கட்டாய நடைமுறை உடனடியாக நீக்கப்படுகிறது.

இது தொடர்பான உத்தரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தரவு கிடைத்ததும் - அடுத்த ஓரிரு நாள்களில் - இந்தக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிடும் என்றும் -

பாதுகாப்பு அனுமதி ஏதும் இன்றியே யாழ்ப்பாணத்திலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கும், சாதாரணமாக விமான அல்லது கப்பல் 'டிக்கெட்' பெற்று பொதுமக்கள் பயணம் செய்யமுடியும் என்றும் -

ஈ.பி.டி.பி. பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு அனுமதியைக் கட்டாயப்படுத்தும் நடைமுறையை நீக்கும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சில வாரங்களுக்கு முன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேரில் சந்தித்துக் கோரியபோது அதை நீக்குவதற்கு ஜனாதிபதி இணங்கியதாகவும் -

கொள்கை அளவில் காணப்பட்ட அந்த இணக்கத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, சம்பந்தப்பட்டோருக்கு இதுதொடர்பான உத்தரவுகளை ஜனாதிபதி பிறப்பித்திருப்பதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஓரிரு நாள்களில் இந்த நடைமுறை நீக்கப்பட்டு மக்கள் சாதாரணமாகப் போய்வரக்கூடிய நிலை ஏற்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக ஈ.பி.டி.பி. பேச்சாளர் சொன்னார்.

வவுனியாவில் இருந்து நாட்டின்

(12ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே...

அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்புத் தொடர் ஆரம்பம்!


## காணாமற்போனோரின் உறவினர்கள் திரண்டனர்

# கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று நடந்த மறியற்போர்!

## காயமடைந்தவர் மரணம்

கடந்தவாரம் அம்பாறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் இனந்தெரியாதோரால் சுடப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர் நேற்றுமுன்தினம் மரணமாகியுள்ளார். திகாமடுல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த என்.பண்டார என்பவரே உயிரிழந்தார். (ஐ-4)

## செயலகப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,நவம்பர்6

**குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டபின்னர் காணாமற்போன பலநூற்றுக்கணக்கானோரின் கதி பற்றிய தகவல்களை வெளியிடுவதில் அரசு தொடர்ந்து காட்டிவரும் அசமந்தப்போக்கைக் கண்டித்து நேற்று யாழ்.செயலகம் முன்பாக பெரும் மறியற்போராட்டம் நடத்தப்பட்டது. காணாமற்போனோரின் உறவினர்கள் - கொட்டும் மழைக்கு மத்தியில் - திரண்டு நடத்திய இந்தப் போராட்டத்தினால் யாழ்.செயலகப் பணிகள் நேற்று முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.**

கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவற்றின் அழைப்பின் பேரில் நடத்தப்பட்ட இந்த மறியற்போரில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் பங்குபற்றினர்.

நேற்று அதிகாலை முதல் பலத்த மழைபெய்த போதிலும் மறியற்போரில் கலந்துகொள்ள வந்தோர் மழையையும் பொருட்படுத்தாமல் காலை 6 மணிக்கு முன்பே செயலக வாயிலில் கூடினர். 6.00 மணிக்கு ஆரம்பமான போராட்டம் பிற்பகல் 2 மணிவரை நீடித்தது.

காணாமற்போனோருக்கு நீதி வழங்குமாறு கோரும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு - கொட்டும் மழைக்கு மத்தியில் பெற்றோர்களும், உறவினர்களும் ஒன்றுகூடியிருந்த காட்சி உணர்வுபூர்வமாக அமைந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## எங்களுக்கு நீதி கிடைக்குமா?



நேற்று கொட்டும் மழைக்கு மத்தியில் செயலகம் முன்பாக மறியற்போர் நடத்திய அன்னையர்கள், உறவினர்கள். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்) *(படம்: கொனிகா கலர் லாப்)*

# கிழக்கில் புலிகள் பகுதியிலும் தேர்தல் பிரசாரப் பணிகள்

## இரண்டு வேட்பாளர்கள் அங்கு விஜயம்

மட்டக்களப்பு,நவ.6

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் பொதுத் தேர்தல் பிரசாரப் பணிகள் நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பில் போட்டியிடும் வேட்பாளர்களான ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை வெள்ளிமலை (அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்), அ.செல்வேந்திரன் (தமிழர் விடுதலைக் கூட்டணி) ஆகிய இருவரும் பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்காக புலிகளின் பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் இருவரும் நேற்றுமுதல் அங்கு தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்த இவர்கள், தேர்தல் பிரசுரங்களை விநியோகித்தனர்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் மேலும் சில வேட்பாளர்கள் அடுத்துவரும் தினங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று பிரசாரப் பணியில் ஈடுபட இருப்பதாகத் தெரியவருகிறது.

தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரசுரங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பரவலாக விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

கிழக்கில் இந்த முறை வாக்களிப்பின் போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குறைநிவர்த்தி சேவை நடக்கும் சமயம்

# முனியப்பர் ஆலயப் பகுதியில் 10ஆம் திகதி மீண்டும் மறியல்!

யாழ்ப்பாணம்,நவ.6

தங்கள் கோரிக்கைகளுக்கு தகுந்த பதில் கிடைக்காதவிடத்து எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்.முனியப்பர் ஆலயப்பகுதியில் மீண்டும் மறியற்போரில் ஈடுபட இருப்பதாக காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

"மிக நீண்டகாலமாக நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம். எமக்கு நீதி கிடைக்கவில்லை. எங்கள் குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. எதிர்வரும் 10ஆம்,11ஆம் திகதிகளில் கொழும்பிலிருந்து வரவுள்ள அதிகாரிகள் யாழ்நகரில் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் சேவை ஒன்றை நடத்தவிருப்பதாக அறிகிறோம். அச்சமயம் அந்தப் பகுதியில் நாங்கள் ஒன்றுகூடி எங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய உங்களால் முடியுமா என்று அவர்கள் முன் குரல் எழுப்ப உள்ளோம்."

இவ்வாறு பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-9-10-ரி-180)

## மின்வெட்டு நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்ப்பாணத்தில் தற்போது அமுல் செய்யப்பட்டுவரும் மின்வெட்டு நேரம் இன்று முதல் மேலும் அதிகரிக்கப்படவுள்ளதாக யாழ். மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை கூல் எயார் நிறுவனம் மற்றும் சுன்னாகம் மின் நிலையம் ஊடாக மின் பெறும் பிரதேசங்களில் தற்சமயம் ஒன்றுவிட்ட ஒருநாள் என்ற அடிப்படையில் பிரதேச வாரியாக மாலை 6 மணி முதல் இரவு 10மணிவரை மின் துண்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்று யாழ்.செயலகம் முன்பாகக் கொட்டும் மழைக்கு மத்தியில் மறியற்போரில் ஈடுபட்டிருந்தோரில் மேலும் ஒரு பகுதியினர். (ஐ-10)

# தாய், மகள், மகன் மூவரும் மன்னாரில் வைத்துக் கைது!

## விசாரணைக்காகக் கொழும்புக்கு

வவுனியா,நவ.6

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இவர்கள் மூவரையும் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லோகேஸ்வரி மரியதாஸ், அவரது மகள் ஜெகதீபா மரியதாஸ், மகன் நிர்மலன் விஜயராஜன் மரியதாஸ் ஆகிய மூவருமே மன்னார் புதிய பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னாரில் வசித்து வந்தனர்.

இதேவேளை -

வவுனியாவில் கடந்த 2ஆம் திகதி இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

கந்தசாமி ஜெயகாந்தன் (வயது 22), அப்புலிங்கம் பிரதீபன் (வயது24) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பொலீஸ் மா அதிபருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

## ரவூப் ஹக்கீம் இன்று தாக்கல்

கொழும்பு,நவ.6

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், பொலீஸ் மா அதிபருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை இன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையில் தனக்குப் பொலீஸ் மா அதிபர் போதிய பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டதாகக் கூறியே அவர் இம்மனுவைத் தாக்கல் செய்யவுள்ளார்.

தனக்கும் தனது ஆதரவாளர்களுக்கும் கொலை அச்சுறுத்தல்கள் உள்ளன. எனவே தனக்கும் கட்சி வேட்பாளர்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று ரவூப் ஹக்கீம் ஏற்கனவே பொலீஸ் மா அதிபரிடம் கேட்டிருந்தார். இக்கோரிக்கையை ஏற்று அவருக்கு இன்னமும் போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

பொலீஸ் மா அதிபருக்கு எதிரான மனு நேற்று தாக்கல் செய்யப்படவிருந்தபோதும் ஹக்கீம் கண்டியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததால் அது தாக்கல் செய்யப்படவில்லை. (ஐ)

# இரண்டரை அடி நீளத்தில் அம்பாறையில் வாக்குச்சீட்டு

கொழும்பு,நவ.6

இலங்கையின் வரலாற்றில் இரண்டரை அடி நீள வாக்குச்சீட்டு இம்முறை அச்சிடப்படுவதாக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஆகக்கூடுதலான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் சுமார் 29 அங்குல நீள வாக்குச்சீட்டு அச்சிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. திகாமடுல்லவில் 280 பேர் போட்டியிடுகின்றனர். (ஐ)

## 310 தேர்தல் வன்முறைகள்

கொழும்பு,நவ.6

நாடு முழுவதும் தேர்தல் தொடர்பான 310 வன்முறைச் சம்பவங்கள் குறித்து முறையிடப்பட்டிருப்பதாக பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் ஐ.தே.கட்சி 114 முறைப்பாடுகளையும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 106 முறைப்பாடுகளையும், மக்கள் விடுதலை முன்னணி 13 முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளன.

அனுராதபுரம், புத்தளம், குருணாகலை, கேகாலை ஆகிய பகுதிகளிலேயே கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.(ஐ-4)

# மாங்குளம் பகுதியில் ஞாயிறன்று 3 பெண் போராளிகள் உயிரிழப்பு

வவுனியா,நவ.6

மாங்குளம் பகுதியில் கடந்த ஞாயிறன்று படையினர் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் தமது தரப்பில் மூன்று பெண் போராளிகள் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ லெப்டினன்ட் மலைஅரசி (மகாராஜா ஜெயா - யாழ்ப்பாணம்).

★ 2ஆம் லெப்டினன்ட் சிலம்பரசி (சுப்பிரமணியம் சுசீலா - கிளிநொச்சி).

★ லெப்டினன்ட் தென்றல் (சிவநாதன் சர்வலோஜினி - யாழ்ப்பாணம்).

இதேவேளை -

முகமாலைப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற மோதல் ஒன்றில் யாழ்அரசி (பரமானந்தம் சாந்தி - புதுக்குடியிருப்பு) என்ற போராளி உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3-164)


## பிற்போடப்பட்டுள்ளது

யா/திருக்குடும்பக் கன்னியர் மட பழைய மாணவர் சங்கத்தினர் 07.11.2001 அன்று நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 27.11.2001 அன்றுக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

(94252) - செயலாளர்.



# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2001

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்-மாவட்ட ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



உண்மை, நேர்மை, நீதி இதுவே எமது மக்கள் சேவை.

வன்முறைகளற்ற அமைதியான தெரிவே எமது விருப்பம்.

வடக்கு - கிழக்கு பல்கலைக்கழகங்களின் தரத்தை உயர்த்த பல திட்டங்கள்.

யாழ்.குடாநாட்டு மக்களின் அடிப்படை வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக புனர்வாழ்வு, புனரமைப்பு, சுயதொழில்வாய்ப்பு, பாதுகாப்புக் கெடுபிடி என்பவற்றுக்கு உடனடித் தீர்வு.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வதிய இருப்பிடம். உண்மைக்காகவும், நேர்மைக்காகவும் உழைப்பவரைத் தெரிவு செய்வோம்.

அரசாங்க ஊழியர்களைத் தகுதி அடிப்படையில் தரமுயர்த்தல்.

முதியோர் ஊதியம் இன்றைய பொருளாதார அடிப்படையில் தரமுயர்த்தல்.

4 ✕

(21895)

யாழ்.குடாநாட்டு மக்களின் அடிப்படை வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப ஞானசுந்தரம் ஆனந்தகுமாரை வெற்றிபெறச் செய்வோம்

## ஆப்கானிஸ்தானுக்கு எதிரான

# அமெரிக்கத் தாக்குதல்கள்; இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தி!

நியூயோர்க்,நவ.6



தனது பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா ஆரம்பித்த தாக்குதல்கள் இன்றுடன் ஒரு மாதத்தைப் பூர்த்தி செய்கின்றன.

கடந்த மாதம் 7 ஆம் திகதி நள்ளிரவு ஆப்கான் மீதான தாக்குதல்களை அமெரிக்கா ஆரம்பித்தது. கடந்த ஒரு மாத காலமாக அமெரிக்க விமானங்கள் தலிபான்களின் நிலைகள் எனக் கருதப்படும் இலக்குகள் மீது தொடர்ச்சியான கடும் குண்டுத் தாக்குதல்களை நடத்திவந்தன.

30 ஆவது நாளாக நேற்றுத் திங்கட்கிழமையும் அமெரிக்க விமானங்கள் ஆப்கானிஸ்தான் மீது குண்டு மழை பொழிந்தன. நேற்று மட்டும் அமெரிக்காவின் பி-52 ரக குண்டு வீச்சு விமானங்கள் சுமார் 100 குண்டுகளை ஆப்கானிஸ்தான் மீது வீசியதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதேவேளை -

அமெரிக்கத் தரைப் படையினரும் ஆப்கானிஸ்தானுக்குள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர். இதற்கென அமெரிக்காவின் விசேட கொமாண்டோப் படையினர் மேலதிகமாக ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பப்பட்டுள்ளனர்.

தலிபான்களின் எதிரணியுடன் சேர்ந்து செயற்படும் விதத்தில் அமெரிக்காவின் விசேட துருப்புக்கள் அணி அணியாக ஆப்கானிஸ்தானுக்குள்அனுப்பப்பட்டு வருகின்றன என்று அமெரிக்க இராணுவ உயர் அதிகாரியான ஜெனரல் றிச்சர்ட் மயர்ஸ் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

தலிபான்களுக்கும் எதிரணிப்படையினருக்கும் இடையில் வடக்கு நகரான மஷார் - ஈ - ஷெரிப்பில் மோதல்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன. எதிரணிப் படைகளிடம் முன்னர் தாங்கள் இழந்த மஷார் - ஈ. - ஷெரிப்பின் தென்பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதற்கு தலிபான்கள் முயன்று வருவதாக எதிரணிப் படைகள் தெரிவித்துள்ளன. (ம)



சூறாவளியுடன் கூடிய கடும் மழையால் தனது வீடு மற்றும் சுற்றுப்புறங்கள் முழுவதும் நீரில் மூழ்கிவிட, கிடைத்த பாரிய பெட்டியொன்றை தெப்பமாக்கி வெள்ளத்தினின்றும் தப்பிச் செல்லும் ஒருவரைப் படத்தில் காணலாம்.

# கடும் சூறாவளியால் கியூபா பாதிப்பு!

ஹவானா,நவ.6

கடந்த சில தினங்களாக மத்திய அமெரிக்காவில் வீசிய கடும் மழையுடன் கூடிய சூறாவளி தற்போது கியூபாவையும் தாக்கியுள்ளது.

கியூபாவின் கரீபியன் தீவுகள் இந்த சூறாவளியினால் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகின.

உலக அரங்கில்


கடந்த 50 வருடங்களில் கியூபாவில் வீசிய புயல்களிலேயே இது தான் மிக மோசமானது என கியூப அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சூறாவளி காரணமாக தாழ்ந்த பகுதிகளில் வசிக்கும் சுமார் 50 ஆயிரம் மக்கள் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டுள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் கியூப அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மணிக்கு 215 கிலோமீற்றருக்கும் மேலான வேகத்தில் வீசும் இந்த சூறாவளி கியூபாவின் தெற்குக் கரையிலிருந்து மத்திய பகுதி நோக்கி நகர்ந்துவருகிறது. எதிர்பார்த்ததைவிட மிக வேகமாக அது நகர்ந்துவருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த வாரம் மத்திய அமெரிக்கா மற்றும் ஜமெய்க்கா ஆகிய இடங்களில் வீசிய இந்தச் சூறாவளி காரணமாக 20க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கியூபாவில் வீசும் சூறாவளி காரணமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் தலைநகர் ஹவானாவுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் தமது உணவுக்காக நீண்ட வரிசையில் காத்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-6)



சூறாவளியால் பாதிக்கப்பட்ட கியூப மக்கள் தலைநகர் ஹவானாவில் தமக்குரிய உணவைப் பெறுவதற்காக வரிசையில் காத்துநிற்கிறார்கள்.

## அமெ.பாதுகாப்பு அமைச்சர் இந்தியா விஜயம்!

அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான தனது விஜயத்தின் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினமிரவு இந்தியா வந்துசேர்ந்தார்.

நேற்று அவர் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஆப்கானிஸ்தானில் போர் நிலைவரம் மற்றும் அமெரிக்கா - பாகிஸ்தான் உறவுகள் என்பன குறித்து இரு அமைச்சர்களும் விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## ஆயிரக்கணக்கான தலித் இந்துக்கள் இந்தியாவில் பௌத்தத்துக்கு மாறினர்!

புதுடில்லி,நவ.6

இந்தியாவில் இந்து மதத்தைச் சேர்ந்த ஆயிரக்காக்கான தலித்துக்கள் தலைநகர் புதுடில்லியில்



பௌத்த மதத்துக்கு மாறியுள்ளனர்.

இந்துமத சமூகத்தில் சாதியக் கோட்பாடுகளால் தாம் எதிர்நோக்கி வரும் அவலங்களில் இருந்து தப்புவதற்காகவே அவர்கள் பௌத்த மதத்தைத் தழுவியதாகக் கூறப்படுகிறது.


இந்த மதமாற்றச் சடங்கில் பௌத்த குருமார்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

இவர்களைப்போன்று இன்னும் பல நூற்றுக் கணக்கானவர்கள் பௌத்த மதத்துக்கு மாறுவதற்காக காத்திருக்கின்றார்கள் என்று இந்த மதமாற்றத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் தெரிவித்தனர்.

மதமாற்ற நிகழ்வுக்கு கடும் பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

"சாதியக் கட்டுப்பாடுகளில் இருந்து வெளியேறுவதற்கு எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை அதனாலேயே மதம் மாறினோம்" - என்று கூறினர் மதம் மாறியவர்கள்.

இந்த மதமாற்ற நடவடிக்கையை இந்தியாவிலுள்ள தீவிரவாத இந்துத்துவ அமைப்புக்கள் மிகக் கடுமையாக கண்டித்துள்ளனர். (ம)



## ஜெயலலிதாவுக்கு கொலை மிரட்டல்

சென்னை,நவ.6

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதாவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அவரது பாதுகாப்புத் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைத் தனிநாடாக்க வேண்டும் எனக்கோரிவரும் தமிழ்நாடு விடுதலைப் படையினரே ஜெயலலிதாவுக்குக் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இணையத்தளம், திடிரிபியூன், குமுதம் இணையத் தளம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களிலேயே இந்தக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் சென்னை பிரிகேடியர் சீலன் என்பவர் அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராகவும் தமிழக அரசியல் தலைவர்கள் பலர் பற்றியும் கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது. (ம-6)

## பிரதமர் வாஜ்பாய் ரஷ்யா பயணமானார்

மொஸ்கோ,நவ.6

மூன்று நாடுகளுக்கான தனது




உத்தியோக பூர்வ விஜயத்தை ஆரம்பித்துள்ள இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நேற்று முன்தினம் நள்ளிரவு ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ போய்ச்சேர்ந்தார்.

சென்.பீற்றர்ஸ் பேர்க் நகரில் சென்று இறங்கிய இந்தியப் பிரதமரை ரஷ்யாவின் துணைப் பிரதமர் இலயாவ் இகானோவ் வரவேற்றார்.

ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினை நேற்றுச் சந்தித்த வாஜ்பாய், இரு நாட்டு உறவுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அவருடன் பேசினார்.

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர், ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் அங்கு ஏற்படுத்தப்படும் புதிய அரசில் இந்தியா மற்றும் ரஷ்யாவின் பங்கு ஆகிய விடயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விரிவான பேச்சு நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ் நாட்டில் அணுமின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றிலும் இரு நாட்டுத் தலைவர்களும் நேற்றுக் கைச்சாத்திட்டனர்.

இந்திய வெளிவிகார அமைச்சர் ஜஸ்வந்சிங் தலைமையிலான உயர் மட்டக் குழு ஒன்றும் பிரதம் வாஜ்பாயுடன் சென்றுள்ளது.

ரஷ்யாவில் தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நாளை புதன் கிழமையன்று வாஜ்பாய் அமெரிக்காவுக்குச் செல்வார். வெள்ளியன்று அதிபர் புஷ்ஷைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

பின்னர் நாடு திரும்பும் வழியில் எதிர்வரும் 12ஆம் திகதி லண்டனுக்குச் சென்று பிரதமர் ரொனி பிளயருடனும் பேச்சு நடத்த உள்ளார்.(ம-6)

## மேற்குக்கரைப் பகுதியில்

# மற்றுமொரு நகரிலிருந்தும் இஸ்ரேலியப் படை வாபஸ்

ஜெருசலேம்,நவ.6

பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியான மேற்குக் கரையின் குவாலியா நகரை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலியப் படையினர் அங்கிருந்து



முற்றாக வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சர் ரெஹ்வம் ஸிவி சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலியப் படைகள் ஆக்கிரமித்திருந்த ஆறு நகரங்களில் இதுவும் ஒன்று. ஏற்கனவே தான் ஆக்கிரமித்திருந்த மூன்று நகரங்களில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறியிருந்தன. இது நான்காவது நகரமாகும்.

இஸ்ரேலியப் படைகளின் ஆறு டாங்கிகள் நகரின் வடக்கு மற்றும் தெற்கு வாயில்கள் வழியாக வெளியேறிச் சென்றதைத் தாம் கண்டதாக பலஸ்தீனப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை -

பலஸ்தீன ஆயுததாரி ஒருவர் இஸ்ரேலியர்களின் பஸ் ஒன்றின் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், அதில் பயணம் செய்துகொண்டிருந்த இரு இஸ்ரேலிய மாணவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 50 பேர் காயமடைந்தனர்.

"எங்களது பஸ்ஸை நோக்கி தீவிரவாதி ஒருவர் வெளியே நின்றவாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை நாங்கள் கண்டோம். அவர் நிறுத்தாமல் தொடர்ந்து சுட்டுக்கொண்டே இருந்தார்" - என்று அந்த பஸ்ஸில் பயணம் செய்த பெண் ஒருவர் கூறினார்.

இஸ்ரேலின் வடக்கு நகரின் பிரெஞ் ...லைச் சந்தியில் இந்தச் சம்பவ... இடம்பெற்றது.

"ஒ... முதல் மூன்று வரையான ஆயுததாரிகள் பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அவர்களில் ஒருவர் இஸ்ரேலியப் பொலீஸாரும், படையினரும் நடத்திய பதில் தாக்குதலில் உயிரிழந்தார். தாக்குதல் நடத்தியவர்கள் 'இஸ்லாமிக் ஜிஹாத்' என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள்".

- என்று ஜெருசலேம் நகர பொலீஸ் தலைமை அதிகாரி மிக்கி லீவ் தெரிவித்தார். (ம)



## நேற்றைய மறியல் போரில்

# சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள்

நேற்று யாழ். செயலகத்தின் முன்பாக கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் நடத்தப்பட்ட மறியற் போராட்டத்தின் போது அவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு: -

★ ராஜபக்ஷவின் சாட்சியமும் செம்மணியில் புதையுண்டு விட்டதா?

★ 'என் பிள்ளையை நான் தேட நீயோ உன் பிள்ளையைப் பார்க்க லண்டன் பயணமோ?'

★ அம்மணியே நீயும் பெண்மணி தானே! என் கண்மணிக்கு செம்மணியில் நடந்தது என்ன?

★ அம்மணியே செம்மணி அகழ்வு கற்பனையா?

★ பல்குழல் புகழ் அம்மணியே! செம்மணிப் புகழும் உனக்கே. வாழ்க புகழ்! வளர்க!

★ ஏஜென்சி ஐயா.... செம்மணி யாழ். மாவட்டத்தில் இல்லையா?

★ அரச அதிபரே! உரிய பதிலைத் தர முடியாவிட்டால் பதவியை விட்டு விலகுக! (ஐ-10-ரி)

# வேண்டாம் மாலை மரியாதை! அரசியல்வாதிகளுக்கு அறிவுரை

கொழும்பு, நவ. 6

அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரத்தின்போது மாலை மரியாதையை ஏற்கவேண்டாம். வேட்பாளர்களே மலர் மாலைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்!

— இவ்வாறு அறிவுரை கூறியுள்ளார் பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு.

அந்தந்த அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஊடாகவே இந்த அறிவுரையை விடுத்துள்ளார் பொலீஸ் மா அதிபர்.

தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகளை குண்டுத் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும்பொருட்டே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் கிடைக்கப்பெறும் கடிதங்கள், மற்றும் பார்சல்கள் குறித்தும் விழிப்புடன் செயற்படுமாறும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

# 100 உள்ளூராட்சி எழுதுநருக்கு விரைவில் இடமாற்றம் வரும்

யாழ்ப்பாணம், நவ. 6

உள்ளூராட்சி சேவை எழுதுவினைஞர்கள் மற்றும் இணைந்த சேவையினர் நூறு பேருக்கு விரைவில் இடமாற்றம் கிடைக்கவுள்ளது.

இது தொடர்பாக உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1.1.2002 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கான மேற்படி இடமாற்றம் தொடர்பான இடமாற்ற சபை உள்ளூராட்சித்திணைக்களத்தில் 23.10.2001 முதல் 25.10.2001 ஆம் திகதிவரை கூடியது. இந்த இடமாற்ற சபையில் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

குறித்த இடமாற்றம் தொடர்பாக ஒரு நிலையத்தில் 5 வருடத்திற்கு மேல் கடமையாற்றுபவர்களை இடமாற்றம் செய்வதற்கென விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

5 வருடத்திற்கு மேல் கடமையாற்றும் யாவரையும் இடமாற்றம் செய்யும் பட்சத்தில் உள்ளூராட்சி மன்ற நிர்வாக வேலைகள் பாதிப்படையும் — என்று எம்மால் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஏற்று 10 வருடத்திற்கு மேல் கடமையாற்றுபவர்களை இடமாற்றத்திற்குள் உள்ளடக்குவது என இணக்கம் காணப்பட்டது. இந்த இடமாற்றத்தில் எழுதுவினைஞர் சேவையில் 100 பேர் வரையில் இடமாற்றம் பெறவுள்ளனர்.

1993 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் இடமாற்றம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததால் பலர் ஒரு நிலையத்தில் நீண்டகாலமாகக் கடமையாற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றம் எமது தொழிற்சங்க ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படுவதால் எழுதுவினைஞர்களின் பாதிப்பு ஓரளவு தவிர்க்கப்பட்டுள்ளது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உள்ளூராட்சி எழுதுநர்கள் முறைப்பாடு சமர்ப்பிக்க வசதி

யாழ்ப்பாணம், நவ. 6

10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவர்த்தி சேவையின் போது உள்ளூராட்சி எழுது வினைஞர்கள் தங்கள் பிரச்சினைகளை முறையிட விரும்பின் நேரடியாகவோ அல்லது உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கம் ஊடாகவோ அவற்றைச் சமர்ப்பிக்கலாம் என்று சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

சங்க மூலம் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் தமது தீர்வு காணப்பட வேண்டிய விடயம் சார்பான ஆவணங்களை 'தலைவர் திரு. செ. செல்வரத்தினம், நல்லூர் பிரதேச சபை' அல்லது 'கௌரவ பொதுச் செயலாளர் திரு செ. சண்முகராசா மாநகர சபை' ஆகியோருடன் 7 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன் தொடர்புகொண்டு ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் நவ. 6

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கச்சேரியடியில் உள்ள சோமசுந்தரம் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ-10)

# இறுதிவரை இலக்கு நோக்கி போராடுவோர் புலிகள் மட்டுமே!

## பிரசாரக் கூட்டத்தில் மாவை

வலி. வடக்கு, நவ. 6

தமிழ் மக்களின் விடிவுக்கென்று கூறிப் பல்வேறு இளைஞர் குழுக்கள் ஆயுதம் ஏந்திப்போராட முன்வந்தன. ஆனால் இடையில் அவர்கள் அதனைக் கைவிட்டுச் சென்றபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே தமது இலக்கை அடைவதற்கு இறுதி வரை போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஐம்பது வருடங்களாக அடக்கி ஒடுக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்ட இனமாக இருந்து வரும் தமிழ் மக்களின் போராட்டத்தை அழித்தொழிக்கும்—முறியடிக்கும்— நடவடிக்கையில் இன்றைய அரசாங்கம் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் கடந்த செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கையைத் தொடர்ந்து அமெரிக்கா மேற்கொள்ளும் பயங்கரவாத அழித்தொழிப்பு நடவடிக்கையை இலங்கைக்கும் விரிவுபடுத்தவேண்டும் என்று அரசு கோரி வருகின்றது.

இத்தகைய அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டு ஒரு சிலர் இன்னும் காணப்படுகின்றனர். கடந்தகாலங்களில் எமது பகுதியில் பலருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டதாகக்கூறப்படுகின்றது. ஆனால் அவ்வாறு வேலைவாய்ப்புப் பெற்றவர்களையிட்டு அனுதாபப்படுகின்றேன்.

அடுத்து வேறு ஓர் அரசு ஆட்சிக்கு வருமாக இருந்தால் அத்தகைய வேலைவாய்ப்பு பெற்றவர்களின் நிலைஎன்னவென்று தெரியாது. இங்கு வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பலவும் அரச திறைசேரியின் அனுமதி பெறப்படாமலே வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான சம்பளம்கூட புனர்வாழ்வுநிதியில் இருந்து பிழையான வழியிலேயே வழங்கப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

உலகில் பலஸ்தீன விடுதலைப் போராட்டம், ஐரிஸ் விடுதலைப் போராட்டம் போன்ற பல இனப்போராட்டங்கள் சர்வதேச ஆதரவுடன் இடம் பெற்று வருகின்றன. அந்தவகையில் எமது போராட்டமும் கூட இனவிடுதலைப்போராட்டமே ஆகும். இப்போராட்டத்தின் மீது பயங்கரவாத முத்திரை குத்த அரசு பல்வேறு வழிகளில் முயன்று வருகின்றது.

மக்களில் சுமார் 60 ஆயிரம் பேரும் 20 ஆயிரம் இளைஞர் யுவதிகளும் தமது இன்னுயிரை ஈர்ந்துள்ளனர். அதே நேரம் 9 லட்சம் மக்கள் அகதிகளாக வாழ்க்கை நடத்துகின்றனர். அதேவேளையில் 17 ஆயிரம் பேர் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்—

இவ்வாறு மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

### ஆனந்தசங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும் வேட்பாளருமான வீ. ஆனந்தசங்கரி தனது உரையில் —

பணத்தையோ பதவியையோ கொடுத்து தமிழ் மக்களை விலைக்கு வாங்கி விடமுடியாது என்பதை சர்வதேச உலகிற்கும் எடுத்துக் காட்டியுள்ளோம்.

ஒரே கொள்கையையும் ஒரே இலக்கையும் உடையவர்கள் ஏன் ஒன்றிணைய முடியாது என வெளிநாட்டுத் தூதுவர்கள், கல்விமான்கள் மற்றும் ஆதரவாளர்கள் என்று பலர் எம்மிடம் கேள்வி எழுப்பி வந்தனர். அதற்கு அமைவாகவே இந்த நான்கு கட்சிகளின் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எமது கூட்டணியில் இணைந்துகொள்வதற்கு புளொட் அமைப்புக்கு எந்த வகையிலும் தடை இல்லை ஆனால் அவர்கள் தமது ஆயுதங்களைக்களைந்து விட்டு வந்து இணையும்படி மட்டும் வலியுறுத்தினோம்—என்றார்.

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமகாராசா மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் க. சிவாஜிலிங்கம், யாழ். மாநகர மேயர் ந. ரவிராஜ், வேட்பாளர் சு. தங்கவேல், ச. ஐங்கரன், க. முத்துலிங்கம் உட்படப்பலர் உரையாற்றினர். (ஐ-86)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்திய அதிகாரி
திருமதி ராஜினி சத்தியசீலன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சீதாலட்சுமி தம்பிமுத்து

(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்கள் இறைபதம் அடைந்தமையைக் கேட்டு அவர்களது துயரில் பங்குபற்றுவதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர், ஊழியர்கள்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/18996)


## பொலீஸ் அறிக்கை சேகரிப்பு

தென்மராட்சி, நவ. 6

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட இழப்பீட்டுப் படிவத்துடன் பொலீஸ் நிலையத்தில் பெறப்பட்ட அறிக்கையின் மூலப்பிரதி இணைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதால்—

விண்ணப்பப் படிவத்துடன் நகல் பிரதி சமர்ப்பித்த வர்த்தகர்கள் அனைவரும் பொலீஸ் அறிக்கையின் மூலப் பிரதியினை உடனடியாக நெல்லியடியில் உள்ள சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் ஒப்படைக்குமாறு மன்றச் செயலாளர் ந. சிவபாலன் அறிவித்துள்ளார். (ஐ-117)

## கரவெட்டியில் நாய்களுக்குத் தடுப்பூசி

தென்மராட்சி, நவ. 6

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கரவெட்டிப் பகுதியில் நாளைமறுதினம் வியாழக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படுமெனத் துன்னாலைப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை யார்க்கருபாலர் பாடசாலைக்கு அண்மையிலும்—

காலை 11 மணி தொடக்கம் 12.30 மணிவரை கரவெட்டி காட்டுப்புலம் இடம்பெயர்ந்தோர் முகாமிலும்—

பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30மணி வரை கரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்திலும்தடுப்பூசி ஏற்றப்படும். (க-117)

## இந்தியாவிலிருந்து விக்கிரகங்கள்

நெல்லியடி, நவ. 6

துன்னாலை புளியங்கிபான் பிள்ளையார் ஆலயத்திற்கு என, ஒரு லட்சத்து 92 ஆயிரம் ரூபா பெறுமதியான, ஐம்பொன்னாலான விக்கிரகங்கள் இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த ஆலயக் கட்டடம் 1987 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாகச் சேதமடைந்து இருந்தது. தற்போது ஆலயம் புனரமைக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## நோய்த்தடுப்பு விழிப்புணர்வு பரீட்சை

தென்மராட்சி, நவ. 6

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தினர், கரவெட்டிக் கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்கள் இடையே நோய்த் தடுப்பு விழிப்புணர்வுப் பரீட்சையை அந்தந்தப் பிரிவு பொதுசுகாதாரப் பகுதியினர் ஊடாக நடத்திவருகின்றனர். (க-117)

## தாக்கப்பட்டு காயம்

நெல்லியடி, நவ. 6

பிறந்ததின வைபவம் ஒன்றிற்காகப் புகைப்படம் எடுக்கச் சென்ற ஒருவர், வழியில் இனந்தெரியாத நபர்களினால் பலமாகத் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்தார்.

அவரது புகைப்படக் கருவிகள் சேதமாகின.

இச்சம்பவம், கடந்த சனிக்கிழமை பகல் வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனையில் இடம்பெற்றது.

மந்திகை கந்தமுருகேசனார் சந்தியில் புகைப்பட நிலையம் நடத்தும் புலோலி கிகிரியைச் சேர்ந்த செ. அன்ரன் (வயது 35) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

இது குறித்து பருத்தித்துறை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-109)

## உதயன்

### போராபத்துக்குள் மேலும் சிக்கும் போக்கு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அண்மைக்காலப் பேட்டிகள், உரைகள், அவற்றில் அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் என்பன, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆர்வமுள்ள ஒரு தலைவர் அவர் என்று முன்னர் நம்பியிருந்த ஒரு சிலரைக்கூட இப்போது அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றன.

லண்டனில் அவர் அளித்த செவ்விகளில் அவர் வரிசைப் படுத்திய 'உண்மைகளை' இதேபத்தியில் ஒருசில தினங்களுக்கு முன்னர் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

அந்த வரிசையில் புதிய தகவல் ஒன்றை - 'உண்மை' ஒன்றை - அவர் வெளியிட்டிருக்கின்றார்.

"பொதுத்தேர்தலில் புதிய அரசு அமைக்க ரணில் தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் ஜனாதிபதிப் பதவியை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கைப்பற்றிவிடுவார். பிரபாகரன் நாட்டின் ஜனாதிபதி ஆவதற்கான சதித்திட்டம் சிங்கப்பூரில் கடந்த வருடம் ஜூன் மாதம் வகுக்கப்பட்டது. தற்போது ஐ.தே.கட்சி மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையிலான நேரடி ஒப்பந்தமாக இது அமைந்துவிட்டது" - என்று புதிய 'உண்மைகளை' ஜனாதிபதி அவிழ்த்துவிடுகின்றார்.

கடந்த வருடம் ஜூன் மாதத்தின் பின்னரே இத்தகைய குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி கூறத்தொடங்கிவிட்டார். அப்போது சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய ரணில் விக்கிரமசிங்க, அங்கே புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார் என்று ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சுமத்தியதும் -

அதை அப்போதே ரணில் விக்கிரமசிங்க அடியோடு மறுத்ததும் - குறிப்பிடத்தக்கவை.

மீண்டும் தமது பழைய பல்லவியை ஜனாதிபதி பாடத்தொடங்கியிருக்கின்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனது அணி தோற்றுவிடுமோ என அஞ்சும் ஜனாதிபதி, தேர்தல் வெற்றிக்காக - புலிகள் தொடர்பாக சிங்கள மக்களுக்கு இருக்கும் அதிருப்தியின் மையை ஐ.தே.க. பக்கமும் திருப்பி - அரசியல் லாபம் தேடமுயல்கின்றார்.

ஐ.தே.கட்சியிடமிருந்து ஆட்சியைத் தான் புதிதாக ஸ்தாபித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைக்கச் செய்வதற்காக 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டம் என்ற பேரினவாதக் கோஷத்தைக் குறுக்குவழியாக முன்வைத்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் பாணியையே இன்று அவரது மகளும் நாடியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பேரினவாதியாகத் தன்னையும், புலிகளை அணைத்துச் செல்லும் முதுகுத் தைரியமற்ற தலைவராக ரணிலையும் சித்திரித்துக் காட்டுவதன்மூலம் சிங்கள மக்களின் வாக்குகளைக் கொள்ளையிட அவர் திட்டமிடுகின்றார்.

"இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அமைதிப் பேச்சே ஒரேவழி. சமாதான அணுகுமுறை மூலம் மட்டுமே நாட்டை உலுப்பும் இந்தச் சிக்கலுக்கு முடிவு காண முடியும். இராணுவ ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது" - வெளிநாட்டு இராஜதந்திரிகளும், மூத்த பிரஜைகளும் - ஏன் மூத்த இராணுவ அதிகாரிகளும்கூட - அரசுக்கு இப்படி அடித்துச் சொல்லிவிட்டார்கள். வெளிநாடுகள் பலவும் கூட இதையே வலியுறுத்துகின்றன. மக்களின் அனுபவப் பாடமும் அதையே சொல்கின்றது.

இந்தப் பாடத்தை நன்கு கற்றுள்ள ஜனாதிபதியும்கூட இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வே சாத்தியமான ஒரேவழி என்பதை அடிக்கடி உணர்ந்து உரைக்கத் தவறுவதில்லை.

அப்படி அமைதித் தீர்வு காண்பதாயின் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாகக் களத்தில் நின்று போராடும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தியே ஆக வேண்டும்; அவர்களை அரவணைத்துச் சென்றேயாகவேண்டும்.

நாட்டின் ஒரு பொறுப்புள்ள தலைவனுக்கு அல்லது பொறுப்பேற்கப் போகின்ற தலைவனுக்கு இந்த அடிப்படை அம்சம் புரிந்திருந்தேயாகவேண்டும்.

அந்தப் புரிதலின் அடிப்படையில் ரணில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், தமது பாரிய பொறுப்பை உணராது நடக்கும் நாட்டுத் தலைவர்களுக்கு வேம்பாய்க் கசக்கலாம். அல்லது தேர்தலை - வாக்குகளை - இலக்கு வைக்கும் கணக்கில் வாய்ப்பாகப்படலாம்.

ஆனால் அந்தகைய பொறுப்பை உணராது - தேர்தல் வெற்றியை மட்டும் இலக்கு வைத்து - மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நாட்டை மேன்மேலும் போர் ஆபத்துக்குள் தள்ளுமே தவிர, சமாதானப் பாதைக்குத் திருப்பாது என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்வது நல்லது.

# தேர்தல் காலத்திலாவது எங்கள் விடுதலை குறித்து குரல் கொடுங்கள்

## அரசியல் கைதிகள் தமிழ்த் தலைவர்களிடம் கோரிக்கை

கொழும்பு,நவ.6

"தேர்தல் காலத்திலாவது எங்கள் விடுதலை குறித்துக் குரல் கொடுங்கள்" - இவ்வாறு பூஸா, களுத்துறை, வெலிக்கடை, போகம்பரை ஆகிய சிறைகளில் உள்ள கைதிகள் தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது சட்டத்தரணிகள் மூலம் அவர்கள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அவர்களது கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்கள் சேவையே தமது பணி எனக் கூறிக்கொள்ளும் தமிழ்க் கட்சிகள் எமது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. நாம் காரணம் இன்றிக் கைது செய்யப்பட்டு, விசாரணை இன்றி நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றோம். சீரான உணவில்லை; நிம்மதியான படுக்கையில்லை; உற்றார், உறவினர்களை நினைத்து ஏங்கி உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எங்கள் விடுதலை குறித்துக் குரல் கொடுங்கள். வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு அழுத்தம் கொடுங்கள். ஒரு வருடமல்ல; இரண்டு வருடங்கள் அல்ல ஐந்து வருடங்களுக்கு மேலாக நாம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றோம். எம்மில் பலருக்கு வழக்குகள் கூட தொடுக்கப்படவில்லை. இதனைப் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஆனாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பல தமிழ் அரசியல் தலைவர்கள் எம்மை வந்து பார்வையிடுகின்றனர். ஆனாலும் எதுவும் நடப்பதில்லை. அமரர் குமார் பொன்னம்பலம் மாத்திரமே எமது விடுதலை குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசினார். தற்போது எவரும் எம்மீது கவனம் செலுத்துவதில்லை. எனவே தமிழ்க் கட்சிகளாகிய நீங்கள் தேர்தல் காலத்திலாவது எமது பிரச்சினைகளை எடுத்தியம்புங்கள் - என்றுள்ளது. (ம)

## நாட்டு நடப்பு

### தும்மல் கிழவியும் இருமல் கிழவியும்

நித்தமும் அரசியல் பற்றி நீயும்
நீள் கவிதை எழுதென்றார் நண்பரெல்லாம்
சத்தியமாக ஒன்றை நானுமிங்கு
சாற்றுவேன் பகிரங்கமாக
பச்சைச்சேலை கட்டிய கிழவியொன்று
பரப்புவாள் இருமியே கிருமிதன்னை
நீலச்சேலைக் கிழவியாளோ நாளும்
தும்மியே பரப்புவாள் கிருமி எல்லாம்
நிச்சயம் எக்கிழவி வென்றாலென்ன
நீங்காது எம் பிரச்சினைகள்
கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு
களத்திலே இறங்கி என்ன?
உச்சமாய் இதை உணர்ந்ததாலே
ஊமையாய் இருப்பேன் யானே!

- *விகடகவி.*

# 18 ஆயிரத்துக்கும் அதிக படையினர் 18 வருட கால யுத்தத்தில் பலி!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தகவல்

கொழும்பு,நவ.6

வடக்கு, கிழக்கில் கடந்த 18 வருடங்களாக நீடித்துவரும் யுத்தத்தினால் 18 ஆயிரத்து 460 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 9,230க்கும் அதிகமானவர்கள் ஊனமுற்றுள்ளனர்.

- இவ்வாறு கூறியுள்ளார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

இராணுவத்தினருக்கான வீடமைப்புத் திட்டத்தைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொஸ்கமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ரத்வத்த அங்கு உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

நாட்டைப் பாதுகாக்கும் பணியில் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின் பிள்ளைகளே அதிகம் ஈடுபட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதால் வடக்கில் விடுதலைப் புலிகளை சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் 11 படையினர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அவசர காலச்சட்டம், சூழ்ச்சியினால் தோற்கடிக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சுயநல கும்பல்களினால் கடந்த 6 மாதங்களுக்கு முதல் இந்தச் சதிவேலை மேற்கொள்ளப்பட்டது. இதனால் பாதுகாப்புப், படையினர் நாட்டைப் பாதுகாக்கும் பணியில் பெரும் பின்னடைவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டுக்காக எதையும் செய்யத் தயார் என்று கூக்குரலிடும் சுயநல அரசியல்வாதிகள் இவ்வாறு நாட்டையும், படையினரையும் காட்டிக் கொடுபதுடன் புலிகளின் பிரதிநிதிகளுடனும் இன்று கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி கட்சியில் புலி உறுப்பினர் ஒருவரையும் தேர்தல் பட்டியலில் சேர்த்துள்ளனர் என்றார்.

### ப.நோ.கூ. கிளையை மீளத் திறப்பதில் அசமந்தப்போக்கு

யாழ்ப்பாணம்,நவ.6

நீர்வேலி பல நோ.கூ. சங்கம் இருபாலை கிழக்கில் உள்ள தனது 34ஆம் இலக்கக் கிளையை மீண்டும திறப்பதில் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருவதாக இருபாலை கிழக்கு பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களை அடுத்து இருபாளைக்கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள், மீண்டும் அங்கு மீளக் குடியமர்ந்து விட்டனர்.

இனியும் அந்தப் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கக் கிளை மீளவும் திறக்கப்படவில்லை.

இது குறித்து சம்பந்தப்பட்டோரிடம் பலமுறை தொடர்புகொண்டும் இதுவரை புதிய நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை என இருபாலை கிழக்கில் உள்ள பொது அமைப்பு ஒன்று அறிவித்துள்ளது. (க-7)

### கணக்காளர் சேவை; கொழும்பில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.6

கணக்காளர் சேவைக்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19ஆம், 21ஆம், 23ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக தமக்குரிய போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# 'தேர்தலின் பின் கட்சி மாறமாட்டோம்' பொ.ஐ.மு. வேட்பாளர்கள் உறுதிப்பத்திரம்

கொழும்பு,நவ.6

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் பின்னர் கட்சி மாற முடியாது. அவ்விதம் எவராவது கட்சி மாறினால், அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கலாம இவ்வாறு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்குவதாக உறுதிகூறும் ஆவணம் ஒன்றில் அனைத்து வேட்பாளர்களிடம் இருந்தும் ஜனாதிபதி கையெழுத்துப் பெற்றிருக்கிறார் என்று அறியப்படுகிறது.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டத்துக்கு ஜனாதிபதி தலைமை வகித்தார். கூட்டத்திற்குப் பின்னர் நடைபெற்ற விருந்துபசாரத்தின் போதே இந்த ஒப்புதல் கையெழுத்துப் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலுக்குப் பின்னர் பொ.ஐ. முன்னணியைச் சேர்ந்த பலர் ஐ.தே. கட்சிக்குத் தாவலாம் என இரகசியத் தகவல் கிடைத்துள்ளது என்றும் -

அதை அடுத்தே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பாணியில் ஜனாதிபதி சந்திரிகாவும் வேட்பாளர்களிடம் இருந்து உறுதிப் பத்திரம் பெற்றுள்ளார் என்றும் கூறப்பட்டது. (க)

### உதயவாக்கு

மூடனைப்போல் பேசுவதைக் காட்டிலும் மூடனைப்போல் மௌனமாயிருப்பது நல்லதாகும்.

### நாளை

ஐப்பசி 21
புதன்கிழமை
திதி : ஷஷ்டி
முற்பகல் 07.44 வரை
ஸப்தமி வைகறை 5.42வரை
நட்சத்திரம் : புநர்பூசம்
முற்பகல் 8.57 வரை
சுபநேரம் : 4.35 - 6.05
ராகுகாலம் : 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

## மாணவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்:

# படிவங்களை வலயப் பணிமனையில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான விபத்துக் காப்புறுதித் திட்டப் படிவங்கள் வலயக் கல்விப் பணிமனையில் உள்ளன.

அதிபர்கள் இன்று செவ்வாய்க்கிழமை படிவங்களைப் பெற்று, உடனடியாக அவற்றைப் பூர்த்தி செய்து மீண்டும் பணிமனையில் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள 'மக்கள் குறைநிவிர்த்தி' சேவையில் படிவங்கள் ஒப்படைக்கப்படவேண்டி உள்ளதால், சகல அதிபர்களும் இன்றைய தினம் அவற்றைப் பெற்று உடன் மீளளிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-10)




யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற "நாளை நமதே" என்ற கருத்தரங்கில் ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு கலந்துகொண்டு உரையாற்றுவதையும், முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் வி.நவநீதன், நீதிபதி மு.திருநாவுக்கரசு, மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி இளங்கோவன், பிரபல சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# ரணிலின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டால் பொலீஸ் மா அதிபரே முழுப் பொறுப்பு!

## ஐ.தே.கட்சி எச்சரிக்கை

கொழும்பு.நவ.6

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏதும் ஏற்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பையும் பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குவே பொறுப்பேற்க நேரிடும் என்று ஐ.தே.கட்சி எச்சரித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட பொலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என பல நண்டகாலமாக கோருகின்ற போதும், பொலீஸ் மா அதிபர் அக்கோரிக்கையை அலட்சியம்செய்துள்ளதாக ஐ.தே.க.விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் 10 தற்கொலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ள போதும் பொலீஸ் பாதுகாப்புத் தொடர்பான தமது கோரிக்கைக்கு பதில் இல்லாமை தம்மை விசனத்துக்குள்ளாக்கி இருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் என்ற வகையில் அவருக்கு உரிய பாதுகாப்பளிக்க வேண்டியது பொலீஸ் மா அதிபரின் பொறுப்பு எனவும் ஆனால் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புப் பற்றி பொலீஸ் மா அதிபர் கவனயீனமாக இருக்கிறார் எனவும் ஐ.தே.கவின்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

*அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலய கட்டட நிதிக்காக* 14.10.2001 ஞாயிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத பல காரணங்களால் எதிர்வரும் டிசெம்பர் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

*புனித அந்தோனியார் ஆலயம்,*
*அச்சுவேலி.* (94249)

- பங்குத்தந்தையும்,
பங்குமக்களும்.


### யம சங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,நவ.6

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயிலில் 8ஆம் திகதி வியாழக்கிழமை மார்க்கண்டேயர் சிவ பூஜை செய்வதற்காக காசி நோக்கிச் செல்லும் காட்சி இடம்பெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மார்க்கண்டேயர் சிவபூஜைக் காட்சியும் தொடர்ந்து யம சங்கார உற்சவம், பிராயச்சித்த அபிஷேகம் என்பனவும் நடைபெறும். (க)

### புனித சாள்ஸ் ம.வி. 125ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவுதின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி பீ.எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜன், யாழ்மரியன்னை பேராலய பங்குத் தந்தை அருட்திரு. ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளார், ஜேர்மன் தொழில்நுட்பநிறுவன தொடர்பாளர் ஜி.ஆர்.இராசசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிறைவு தினத்தை முன்னிட்டு காலை 8.15 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் யாழ்மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(ம-4)


*கோலம்ஸ் சில்க்ஸ் ஸ்தாபனத்தாரின்*
மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி!
நேற்று 05.11.2001 முதல் 15.11.2001 வரை.
ஓர் அரிய சந்தர்ப்பம்
இன்றே நாடுங்கள்
கோலம்ஸ் சில்க்ஸ்
பிரதான வீதி, (94222) சங்கானை.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
அதிபர்



### திரு.S.S.தங்கராஜா

B.A.,Dip. in.Edu.S.L.P.S -I

அவர்கள் 01.06.1996 முதல் இலங்கை அதிபர் சேவை தரம் - 1 இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துவதுடன், அவர் எதிர்காலத்தில் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீருஞ் சிறப்புமாகப் பல்லாண்டு வாழ மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
யாழ்ப்பாணம். (94246)
- *ஆசிரியர் கழகம்.*

## 31 ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும்



07.10.2001 அன்று இறைவனடி சேர்ந்த
எமது புதல்வனும் சகோதரனுமாகிய

### சண்முகநாதன் கஜேந்திரன் (ரவித்தா)

தோற்றம்: 11.06.1967 மறைவு: 07.10.2001

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (06.11.2001) செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திக் கிரியைகளிலும், ஏகதிஸ்ட சபிண்டீகரணம் மற்றும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.* (94040)
- குடும்பத்தினர்.

## 31 ஆவது நாள் நினைவலைகள்

மண்ணில் 11 - 06 - 1967



விண்ணில் 07 - 10 - 2001

### அமரர் சண்முகநாதன் கஜேந்திரன்

(ரவித்தா)

*(முன்னாள் அங்கத்தினர், மினிபஸ் உரிமையாளர்)*

மாதம் ஒன்று சென்றதெங்கே - உன்
இனிய முகம் மறைந்ததெங்கே?
இளமையுடன் சென்று விட்டாய்
எம் இதயமெல்லாம் தவிக்க விட்டாய்
எப்போது உனை மறந்தோம்
நினைப்பதற்கு.
எத்தனை இன்பங்கள் வந்த போதும்
ரவித்தா
நீ இல்லா உலகில் மகிழ்ச்சி என்ற
சொல்லிற்கு முழுமையே எமக்கில்லை
ரவித்தா
உயிர் உள்ள காலமெல்லாம் எமை
வாட்டும் உனைப் பிரிந்த துயரம்
ரவித்தா.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*காரைநகர் தனியார்*
*சிற்றூர்தி சேவைச் சங்கம்,*
*மூளாய்.* (94226)

நிர்வாகத்தினர்,
உரிமையாளர்கள்,
ஊழியர்கள்.

## சாவகச்சேரி பிரதேச சபை

### (இருபாலை கோண்டாவில் வீதி, கோண்டாவில்.)

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பொதுநிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 13.11.2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தலைவர், சாவகச்சேரி பிரதேச சபை, இருபாலை கோண்டாவில் வீதி, கோண்டாவில்"என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்கும் எதிர்வரும் 13.11.2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்பு பணம் | கேள்விப் பத்திரப் பணம் | பொருள்கள். சேவைகள் வரி |
|---|---|---|---|
| 1. கரம்பைக்குறிச்சி மேற்கு மதி ஒளி சனசமூக நிலையம் புனரமைத்தல். | 1000.00 | 500.00 | 62.50 |
| 2. வரணி கறுக்காய் கந்தசுப்பெருமாள் சனசமூக நிலையந் திருத்தம். | 1000.00 | 500.00 | 62.50 |

மேற்குறிப்பிட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துபவர்தன் பேரில் 12.11.2001ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்கள் மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேச சபை,
இருபாலை கோண்டாவில் வீதி,
கோண்டாவில்.
02-11-2001.

அன்ரன் பொன்னையா (J.P.)
தலைவர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

(C-13964)

## மரண அறிவித்தல்

### திருமதி பாவிலு மரியம்மா

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது தும்பசிட்டி புலோலி மேற்கு, பருத்தித்துறையில் வசித்தவரும், காலஞ்சென்ற அந்தோணிப்பிள்ளை பாவிலுவின் அன்பு மனைவியுமான திருமதி பாவிலு மரியம்மா நேற்று முன்தினம் (04-11-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் அடைக்கலம் (மாத்தளன்), அந்திரேஸ் (மணற்காடு), லூர்த்தம்மா (மாத்தளன்), யேசுதாசன் (பருத்தித்துறை), யோசேப் (பருத்தித்துறை, ஜே.ஆர்.எம்.டெக்ஸ் பங்காளரும், எல்சியா சில்க் உரிமையாளரும்), பிலோமினா (பருத்தித்துறை). செபமாலையம்மா (பருத்தித்துறை), கபிரியேல் (U.K.), ஞானப்பிரகாசம் (ஜேர்மனி), பென்ஜமின் (சுவிட்ஸ்சலண்ட்), செபஸ்டியன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், பேதுருப்பிள்ளை (மாத்தளன்), மேரிறெஜினா (மணற்காடு), ஆரோக்கியநாதர் (மாத்தளன்), காலஞ்சென்ற அன்னம்மா (அல்வாய் மேற்கு) மற்றும் பார்பரம்மா (பருத்தித்துறை), லூசியா (பருத்தித்துறை), அந்தோனிப்பிள்ளை (பருத்தித்துறை), இராஜேந்திரம் (தபால் ஊழியர், உபதபால் கந்தோர், முள்ளியான்), மேரி இருதய சீலி (U.K.), ஹெலன் (ஜேர்மனி), ராதிகா (சுவிஸ்சலண்ட்), சபீனா (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமியாரும், நூற்றுக்கு மேற்பட்ட பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி, பாட்டன், பாட்டி உடையவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று முன்தினம் (04-11-2001) ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கோரியடி பொதுச் சேமக்காலையில் மாலை 6.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தும்பசிட்டி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.* (94248)

தகவல்
P.யோசேவ்
(மகன்)

# கட்சித் தாவல் நாடகத்தை அரங்கேற்றியவர் சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்காவே!

**இந்த நாட்டின் நாடாளுமன்ற வரலாற்றில் கட்சித்தாவல் கூட்டாகவும், தனியாகவும் எத்தனையோ தடவைகள் இடம் பெற்றுள்ளன. இருப்பினும் 1964 மற்றும் 2001 ஆண்டுகளில் கூட்டாக இடம்பெற்ற கட்சித் தாவல்கள் காரணமாக அரசுகள் கவிழ்ந்தன. இந்தச் சம்பவங்கள் குறித்து ஆராய்கிறது இக் கட்டுரை. 28.10.2001ஆம் திகதிய ஞாயிறு "லங்காதீப" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

பானையைப் பார்த்து சட்டி கரி என்று சிரித்ததாம் - சட்டியைப் பார்த்துப் பானை கரி என்று சிரித்ததாம்.

தற்போது ஸ்ரீலங்காவிலுள்ள அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளை அவதானிக்கும்போது மேற்கூறப்பட்ட கருத்து நினைவிற்கு வருகிறது. அரசியல் உலகில் நட்பும், பகையும் தற்காலிகமானவையே. அதேபோலவே அரசியல் அதிகாரமும் தற்காலிகமானதே.

அண்மையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து அரசியல் அரங்கில் சூடான வாத, விவாதங்கள் இடம்பெற்றன. அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சி வரிசைக்கு சென்றதால் அரசு பெரும்பான்மையை இழந்தது. அதனையடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது இது முதற்றடவையல்ல. இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடாளுமன்ற அங்கத்தவர்கள், ஏன் அமைச்சர்கள்கூட அரச தரப்பில் இருந்து எதிரணிக்கு மாறியுள்ளனர்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அரசு ஆட்டம்கண்டது - கவிழ்ந்தது.

**சிறிமாவோ ஆட்சி கவிழ்ந்தது**

1964இல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சித்தாவல் காரணமாக அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சி கவிழ்ந்தது.

இருப்பினும் கட்சி மாறும் படலம் வரலாற்றில் அதற்கு முன்னரே ஆரம்பித்துள்ளது. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததையடுத்து 1948 இல் டி.எஸ்.சேனநாயக்கா நாட்டின் முதலாவது பிரதம மந்திரியானார். சிங்கள மகா சபையின் தலைவரான எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஐ.தே.கட்சியுடன் இணைந்தார்.

அவ்வேளையில் அரசில் பிரதம மந்திரிக்கடுத்தவர் என்ற நிலையில் பண்டாரநாயக்கா விளங்கினார். டி.எஸ். சேனநாயக்காவின் பின்னர் தானே பிரதமராகலாம் என்ற எண்ணத்துடன் இருந்த பண்டாரநாயக்கா சபை முதல்வராகவும் உள்ளூராட்சி அமைச்சராகவும் பதவி வகித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எழுதிய தனது சுயசரிதை என்ற நூலில் உள்ள தகவலின்படி டி.எஸ்.சேனநாயக்காவிடம், பண்டாரநாயக்கா ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார். அதாவது பிரதிப் பிரதமர் பதவியை உருவாக்கி அதனைத் தனக்கு வழங்குமாறு கோரினார். ஆனால் டி.எஸ். சேனநாயக்கா அதைச் செவிமடுக்கவில்லை.

அதேநேரம் ஐ.தே.கட்சியில் மூன்றாவது நிலையில் இருந்த சேர் ஜோன்.கொத்தலாவல இரண்டாவது இடம் தனக்கே வழங்கப்பட வேண்டும் என அமைச்சரவையிலும் வெளியிலும் பண்டாரநாயக்காவுடன் பிரச்சினை எழுப்பிக்கொண்டிருந்தார். பிரதமரின் தூண்டுதலாலேயே கொத்தலாவல தன்னுடன் முட்டிமோதுகிறார் என பண்டாரநாயக்கா நம்பினார்.

**பண்டாரநாயக்கா தனிக்கட்சி அமைப்பு**

அரசியலில் பண்டாரநாயக்கா தீர்க்கமான முடிவை மேற்கொள்வதற்கு அதாவது ஐ.தே.கட்சியில் இருந்து வெளியேறித் தனிக்கட்சி அமைப்பதற்கு இதுவே காரணமாக அமைந்தது. அந்த நிகழ்வு 12.07.1951 அன்று இடம்பெற்றது.

அன்று நாடாளுமன்றத்தின் பார்வையாளர் வரிசை நிறைந்து வழிந்தது. சபை கூடுவதற்கான அறிவிப்பு மணி அடிக்கப்பட்டது. அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தமது ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர். பிரதமர் சபையை உற்று நோக்கி நிலைமையை அவதானித்தவாறு தனது ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

சபைக் கூட்டம் ஆரம்பிப்பதற்குச் சற்றுநேரத்துக்கு முன்னர் பிரதான வாசல் வழியாக சபைக்குள் நுழைந்த பண்டாரநாயக்கா, சபாநாயகர் சேர் பிரான்ஸிஸ் மொலமுறேக்கு தனது வணக்கத்தைத் தெரிவித்தார். அவரது கால்கள் எதிரணிவரிசையை நோக்கி அடியெடுத்து வைத்தன. தன்னைப் பின்தொடர்ந்து யாரும் எதிரணி வரிசைக்கு வருவார்கள் என்று பண்டாரநாயக்கா நினைத்திருக்கவில்லை.

ஆனால் அவரது நிழலைப் பின்தொடர்ந்து ஒருவர் சென்றுகொண்டிருந்தார். அவர் பெலியத்தைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஏ.ராஜபக்ஷ ஆவார்.

சபை முதல்வராகவும் அமைச்சராகவும் விளங்கிய பண்டாரநாயக்கா ஒரு நொடிப்பொழுதில் அத்தனகலத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டும் விளங்கினார். பண்டாரநாயக்கா கட்சி மாறிய ஒரு சில நாள்களில் மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிரணிக்குச்

## அரசியலில் நட்பும் பகையும் தற்காலிகமான நிகழ்வுகளே

சென்றனர். ஏ.பி.ஜயசூரியா, ஜயவீர குறுப்பு, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மற்றும் டி.எஸ்.குணசேகரா ஆகியோரே அவர்கள் ஆவார்.

**முதற் கட்சித் தாவல்**

இந்நாட்டின் நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முதலாக இடம்பெற்ற கட்சித்தாவல் இதுவே ஆகும். இருப்பினும் அன்று டி.எஸ்.சேனநாயக்காவின் அரசுக்கு அந்தக் கட்சித் தாவல் அச்சுறுத்தலாக அமையவில்லை. இருந்தபோதிலும் கட்சித்தாவல் நாடகங்கள் அத்துடன் முற்றுப் பெறவில்லை.

1964இல் மிகவும் முக்கியமான ஒரு கட்சித் தாவல் நாடகம் அரங்

**தமிழில்: கஜனி**

கேறியது. 1960இல் ஆட்சியைக் கைப்பற்றிய ஸ்ரீ.ல.சு.கட்சியும் அதனுடன் இணைந்திருந்த இடதுசாரிகளும் ஆரம்பத்திலிருந்தே ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்துடன் (LAKE HOUSE) மனக்கசப்புக் கொண்டிருந்தனர்.

அந்த நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டும் என அவர்களில் பலர் கருதினர். குறிப்பாக இடதுசாரிகள் இதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். ஐ.தே.கட்சியை மட்டந்தட்ட வேண்டுமேயானால் கட்டாயமாக அந்த நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டும் என அரசை அவர்கள் வற்புறுத்தினர்.

**பத்திரிகை ஆணைக்குழு**

அவ்வேளையில் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. அவர் செனட் சபை உறுப்பினராக இருந்துகொண்டே பிரதமர் பதவியை வகித்து வந்தார். செய்தி ஏடுகளை அரசுடைமையாக்குவது தொடர்பான பிரேரணையை ஆதரிப்பதற்கு முன்னர் பத்திரிகை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பத்திரிகை ஆணைக்குழுவின் சிபார்சுகள் எனக் கூறி அரசு பல்வேறு பத்திரிகை பிரேரணைகளைத் தயாரித்தது. அவற்றுள் சில நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன. வேறு சில நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன.

ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தை அரசுடைமை ஆக்குவதற்காக அரசினால் தயாரிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை 16ஆகும். நாட்டில் அப்போதிருந்த ஏனைய விடயங்களை ஒதுக்கிவிட்டு பத்திரிகை நிறுவனத்தை அரசுடைமையாக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்த விதத்தை இதில் இருந்து புரிந்துகொள்ளலாம். இருப்பின் இவ்விடயத்தில் மக்களின் ஒத்துழைப்பு அரசுக்குக் கிடைக்கவில்லை. அரசில் அங்கம் வகித்த சிலரும் இதற்கு இணங்கவில்லை.

இதற்கிடையே நாடாளுமன்றத்தின புதிய கூட்டத்தொடரையொட்டி 20.11.1964 அன்று மகாதேசாதிபதி சிம்மாசனப் பிரசங்க உரையை நிகழ்த்தினார். சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை 03.12.1964 அன்று விவாதம் நடைபெற்றது. அது தொடர்பான வாக்களிப்பின் போது அரசுக்கு ஆதரவாக 73 பேரும் எதிர்த்து 74 பேரும் வாக்களித்தனர். சி.பி.டி.சில்வா உட்பட 14 பேர் எதிர்க்கட்சியுடன் இணைந்து வாக்களித்தனர்.

அமைச்சர் அமரானந்த ரத்நாயக்காவின் காரின் சில்லுக்குக் காற்றுப் போனதால் வாக்களிப்பு நேரத்தில் நாடாளுமன்றத்திற்கு வரமுடியவில்லை எனக்கூறப்பட்டது. மற்றொரு அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மலசலகூடத்தில் ஒளிந்திருந்தார் எனவும் கூறப்பட்டது. கலாநிதி என்.எம். பெரேராவும் பேர்னாட் சொய்ஸாவும் வெளிநாடு சென்றிருந்தனர்.

இந்தத் தோல்வி குறித்து சட்டபூர்வமான சர்ச்சைகளும் வாத, விவாதங்களும் 14 நாள்களாக இடம்பெற்றன. இறுதியில் 14 நாள்களுக்குப் பின்னர் சிறிமாவோ நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதன் பின்னர் (1965) நடைபெற்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியினர் (ஐ.தே.க.) ஆட்சியைக் கைப்பற்றினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் வழங்கப்பட்டது எனவும் அதனாலேயே அரசு தோற்றது எனவும் வதந்தி பரவியபோதும் எவராலும் அதை உறுதிப்படுத்த முடியவில்லை.

**14 உறுப்பினர்கள் கட்சி தாவினர்**

1964இல் 14 உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சிக்குத் தாவினர். 2001இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் (எஸ்.பி. திசாநாயக்கா) மற்றும் மூத்த உறுப்பினர்கள் உட்பட 9 பேர் கட்சி மாறினர். அதே நேரம் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சபாநாயகராகப் பணியாற்றிய அனுரா பண்டாரநாயக்கா ஆளும் கட்சியுடன் இணைந்துள்ளார்.

முன்னரைப் போலவே இம்முறையும் பணம் கொடுத்தே நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாங்கப்பட்டனர் என ஆளும் கட்சி எதிர்க்கட்சி மீது குற்றஞ்சுமத்தியுள்ளது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 3 கோடி ரூபா வீதம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இருப்பினும் இதை உறுதிப்படுத்த சாட்சியங்கள் இல்லை. எனினும் நெருப்பில்லாமல் புகை வராது என மக்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.

இந்தக் கட்சித்தாவல் காரணமாக அரசு பெரும்பான்மையை இழந்தது. இதனால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. அடுத்து நாட்டை யார் ஆளவேண்டும் என்பது தொடர்பான தீர்ப்பினை டிசெம்பர் 5ஆம் திகதி மக்கள் வழங்கவுள்ளனர். ☆

## கல்விச்சாலைக் காட்சிகள்



கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் உறுப்பினர் சு.பரமநாதன் மங்கள விளக்கேற்றிப் போட்டிகள்ள ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அதிபர் க.சிவாஜி, உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாலசிங்கம், திரு.புவனேந்திரன் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர். (ஐ)



பருத்தித்துறை, கிராமக்கோட்டடி மாதிரிச் சிறுவர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதற் பரிசினைப் பெற்றுக்கொண்ட மாணவன் யோகராசா கஜந்தனுக்கு கிராமஅலுவலர் தயாநிதி பரிசில் வழங்குகிறார். (ஐ-15)



சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா 16.10.2001இல் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் உரையாற்றுவதையும், பாடசாலை அதிபர் சந்திரசேகரம், வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திரு.சிவராசா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: சங்கானைச் செய்தியாளர்)*



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் உலக ஆசிரியர் தின விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஸ்ணசாமி மங்கள விளக்கேற்றுவதையும் வித்தியாலய முதல்வர் சு.யோகராசா, ஆசிரியர் திரு. ஜெயக்[illegible]மார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஜ-10)

# பாலசிங்கம் ஜீவமரணப் போராட்டம் நடத்தியபோது

# சிகிச்சைக்கு வாய்ப்பளிக்க நிபந்தனை போட்டது அரசு!

## பிரபாகரன் அதிர்ந்து போய் அதிரடி நடவடிக்கை எடுத்தார்

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல், புலிகள் இயக்கத்தில் பல வருடங்கள் இருந்து நேரில் தாம் கண்டவற்றை எல்லாம் 'சுதந்திர வேட்கை' என்ற தமது ஆங்கில நூலில் சுவைபடச் சொல்கிறார்.**

**பிரபாகரன், போராளிகள், போராட்டங்கள், புலிகள் இயக்கம் பற்றி எல்லாம் கூறுகின்றார். அவர் வெளியிட்டிருக்கும் தகவல்கள் உணர்ச்சிபூர்வமானவை; உள்ளத்தைத் தொடுபவை. அவர் தமது நூலில் தெரிவித்துள்ள சில சம்பவங்கள் பற்றிய விவரம் கொழும்பிலிருந்து வெளியாகும் நமது சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' நாளிதழில் அவ்வப்போது இடம்பெறுகின்றது. யாழ். வாசகர்களின் நன்மை கருதி அவற்றை மறுபிரசுரம் செய்கிறோம்.**

1999ஆம் ஆண்டு ஓகஸ்ட் 27ஆம் திகதி மாலை பெண் போராளி ஒருவரின் திருமணத்துக்குச் செல்வதற்காக வெள்ளை வேட்டி சட்டையில் பாலா தயாராக நின்றபோது அவர் உற்சாகமாகவும், தூய்மையாகவும் தோற்றமளித்தார். ஆனால் நான் அவரைக் கவனித்தபோது எல்லாம் சரியாக இருப்பதாகத் தெரியவில்லை. அவரது வழமையான தோற்றம் சற்று வித்தியாசமாக இருந்தது. அவரது கண்கள் வீங்கியமாதிரி இருந்தன. முதல்நாள் மதியஉணவின் பின் வழமையைவிட சற்று அதிக நேரம் உறங்கியதால் இப்படியிருக்கும் என்று எண்ணினேன். ஆனால் இன்றும் அந்த வீக்கம் நீடித்திருக்கும் என்று நான் கருதவில்லை.

பாலாவின் இந்தச் சிறிய முகவீக்கத்தை நான் விடுதலைப் புலிகளின் வைத்தியர் சூரியிடம் திருமணத்தின் போது சுட்டிக்காட்டினேன்.

சூரி சிறிது அதிர்ச்சியடைந்தார். கடந்த சில வாரங்களாக பாலாவுக்கு காரணமின்றி இருந்து வந்த வயிற்று



அசௌகரியமும், கண்களைச் சூழவுள்ள வீக்கமும், கால் எலும்பின் சிறு நோவும். சிறுநீரகக் குழாயின் வியாதியாக இருக்கலாம் என்று நான் வேடிக்கையாகச் சொன்னது சூரிக்கு சிறிது திகைப்பைக் கொடுத்திருக்க வேண்டும்.

மறுநாள் காலையில் பாலா பெரும்பாலும் சிறுநீர் கழிக்கவில்லை. பாலாவுக்கு கடுமையான சுகவீனம் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. இத்துடன எங்கள் வாழ்க்கை வரலாற்றில் புதிய திருப்பங்கள், சம்பவங்கள் ஆரம்பமாகின. இந்த வியாதியின் ஆரம்பக்கட்டத்தில் வன்னியில் உடல்நிலை மோசமாகி மரணத்தின் விளிம்புக்கே செல்ல நேர்ந்தது. நாங்கள் அன்றிலிருந்து நிச்சயமற்ற வாழ்வை வாழ்ந்தோம்.

பாலாவின் உடலில் தோன்றிய அறிகுறிகள், சமிக்ஞைகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் வைத்தியர்கள் பாலாவிடம் விரைந்தனர். வியாதியைக் கண்டுபிடிக்கும் கருவிகள் எதுவும் இல்லை. நோயைக் கண்டுபிடிக்கும் கருவிகள் இல்லாத நிலையில் கண்டுபிடித்தனமாக மருந்து கொடுத்து சிகிச்சையளிக்க முற்படுவது மிக ஆபத்தானது' என்று சூரி தனது கருத்தைத் தெரிவித்தார்.

'பாலாவைப் பரிசோதித்து வரும் போது விஞ்ஞானபூர்வமாக மேலும் நோயைக் கண்டறிவதில் சூரி தமது சகா ஒருவருடன் வழிவகை தேடினார். நோயாளியின் பெயரை வெளியிடாமலே பாலாவின் சிறுநீர், இரத்தம் ஆகியவற்றைக் கொழும்புக்கு அனுப்பி பரிசோதிக்க ஏற்பாடுகளைச் செய்தார். வேறு பெயர்களில் பாலாவின் சிறுநீரும் இரத்தமும் கொழும்பில் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

சிறுநீர், இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பி சுமார் ஒரு வாரத்தின் பின் சூரி மற்றொரு வைத்தியருடன் ஒரு நாள் மாலை எங்கள் வீட்டுக்கு வந்த போது ஏதோ கெட்டசெய்தி வருகிறதென்று தெரிந்துகொண்டேன். தன்னால் சொல்லமுடியாத செய்திகளை வெளியிடவேண்டுமெனில் மற்றொருவரை உதவிக்கு அழைத்து வரும் பழக்கம் சூரியிடமிருப்பதை நாங்கள் ஏற்கனவே தெரிந்திருந்தோம்.

சிறுநீர், இரத்தம் பரிசோதிக்கப்பட்டதிலிருந்து பாலாவின் சிறுநீரகக் குழாயின் இயக்கம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இடது சிறுநீரகம் முற்றாக இயங்காமல் தடைப்பட்டிருக்கின்றதென்பதை நாங்கள் எவரும் அறிந்து கொள்ளவில்லை.

மோசமடைந்துவரும் இந்த நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு வன்னியில் எந்த வசதியுமில்லை.

பாலாவின் நிலை மோசமடைந்து வருகின்றதென்பதைப் பார்த்தாலே தெரிந்துவிடும். பாலாவின் நோய் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து தினமும் வீட்டுக்குவரும் பிரபாகரனுக்கும் பரிசோதனையிலிருந்து வியாதி கண்டறிந்தது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

உணவு மற்றும் மருந்துகள் வடபகுதி செல்வதற்கு கடந்த பதினைந்து வருடங்களாக இலங்கை அரசு விதித்துள்ள தடையினால் அப்பகுதியிலுள்ள மக்களின் சுகாதாரக் கவனிப்பு மற்றும் ஆரோக்கியம் மோசமடைந்துள்ளது. 'பரிசித்தமோல்' போன்ற ஆதார மருந்துகளுக்குக்கூட விதிக்கப்பட்டிருக்கும் தடையால் மக்கள் பெரும் கஷ்டங்களுக்குளளாவதுடன் பல சந்தர்ப்பங்களில் மரணங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இங்குள்ள வைத்தியசாலைகளில் நோய்களைக் கண்டறிவதற்கான கருவிகள் இல்லை. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 'எக்ஸ்ரே' படம் எடுக்கும் கருவி இல்லை. இங்குள்ள இந்த இயந்திரம் எப்போதோ இயங்காமல் நின்றுவிட்டது. சிறிய 'எக்ஸ்ரே' படம் எடுப்பதானால்கூட வன்னிக்கு மறுபக்கத்தில் உள்ள இடங்களுக்கு மக்கள் நீண்ட பயணம் மேற்கொள்ளவேண்டும். இங்கு கொண்டுவரப்படும் இயந்திரங்கள் வந்தவுடனேயே அநேகமாகப் பழுதடைந்துவிடுகின்றன.. இவற்றைப் பழுதுபார்க்கவோ மற்றும பகுதிகளுக்குக் கொண்டுவரவோ பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடையாது.

நோயைக் கண்டுபிடிக்கும் வசதிகள் வன்னியில் இல்லாத சமயத்தில்தான் பாலா நோய்வாய்ப்பட்டார்.

சிறுநீரகக் குழாய் செயற்படாத நிலையில் நோயாளிகள் கொழும்புக்குச் சென்று சிகிச்சை பெறுவதுண்டு. பாலா சிகிச்சைக்காகக் கொழும்புக்குச் செல்ல முடியாது. சிறுநீர், இரத்தம் ஆகியவற்றை கொழும்புக்கு அனுப்பி, நோயை அறிந்து கிடைக்கக்கூடிய மருந்துகளைக் கொடுத்து சிகிச்சையளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தப் பரிசோதனை அறிக்கைகள் இடைவழியில் இராணுவ சோதனைச் சாவடிகளில் ஏற்படும் தாமதங்களால் தாமதமடைந்துவிடும். பரிசோதனை அறிக்கையைப் பார்த்து சிகிச்சை அளிப்பதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளதால் நோய் மேலும் அதிகரித்துவிடுகிறது. சூரியும் எதுவும் செய்ய முடியாத நிலையில் பாலாவின் நோய் அதிகரிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார். எனினும் மோசமான நிலையை எட்டிய இரத்த அழுத்தத்தை மிகப் பழைய முறையையும் மருந்தையும் கொண்டு ஓரளவு கட்டுப்படுத்திவிட்டார்.

நீரிழிவைச் சமாளிப்பதற்கு வேண்டிய 'இன்சுலின்' மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது.

பாலா பயன்படுத்தும் 'இன்சுலின்' மருந்து கொழும்பு, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் கிடைக்கும். நாங்கள் இந்தியாவிலும் யாழ்ப்பாணத்



திலும் இருந்தபோது பாலாவுக்குத் தேவையான மருந்துகளை புதிது புதிதாக வழங்குவதற்கு பிரபாகரன் ஒழுங்கு செய்திருந்தார். நான் இந்த தேவைக்கென பாதுகாப்பாக வைத்திருந்த 'இன்சுலின்' மருந்து காலம் கடந்து விட்டதாகவும் - பழுதடைந்தனவாகவும் - இருந்தன. உடனடியாக 'இன்சுலின்' கிடைப்பதற்கு வழியில்லை. காலம் கடந்த சில மருந்துப்போத்தல்களை எடுத்து பாலாவுக்கு உபயோகித்துப் பார்க்க நான் துணிந்து நடவடிக்கை எடுத்தேன். இதில் சிறிது பயன்கிடைத்தது. அதிசயம் நிகழும்படி யாராவது 'இன்சுலின்' மருந்து எடுத்துக்கொண்டு வருவார்களென நான் எதிர்பார்த்திருந்தேன். இரண்டு வாரங்கள் கழித்து, நிறைய 'இன்சுலின்' மருந்துகளை ஐஸ்பையில் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்தார் பிரபாகரன்.

பாலாவின் நிலைமை மேலும் மோசமடைந்தது. படுக்கையிலிருந்து

**தமிழில்:- எம்.ஜீ**

எழுவதற்கும் கஷ்டப்பட்டார். இருட்டறையிலே இருந்தார். சூரிய ஒளியைப் பார்க்கமுடியவில்லை. சிறுநீரக நோயினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஒருவரை சுகமாக வெளியே கொண்டுசெல்வதற்குக் கேட்ட மனிதாபிமான உதவிக்கு எந்தச் சம்பந்தமுமில்லாத இராணுவச் சம்பந்தமான நிபந்தனைகளை - உத்தரவாதங்கள் என்றும் சொல்லக்கூடியவைகளை - சந்திரிகா முன்வைத்திருந்தார்: இவற்றைபாலாவும் நானும் உடனடியாகவே நிராகரித்துவிட்டோம்.

இந்த மோசமான நிபந்தனைகளுக்குச் சம்மதிப்பதை விட கௌரவமாகவும், சுயமரியாதையுடனும் மரணிப்பதேமேல் - என்று பாலா சொல்லிவிட்டார். இந்த நிபந்தனைகள் சந்திரிகாவின் இரக்கமற்ற - எதிலும் கணக்குப் பார்க்கும் - மனப்பான்மையையே எடுத்துக்காட்டியது.

ஏற்றுக்கொள்ள முடியாத இந்த நிபந்தனைகளை முன்வைத்த சந்திரிகா மீதும் கதிர்காமர் மீதும் பிரபாகரன் ஆத்திரம் கொண்டார். இந்த விஷயத்தில் ஜனாதிபதியின் நிலை விடுதலைப் புலிகள் அவர் பற்றிக் கொண்டிருந்த எண்ணத்தை முற்றிலும் மாற்றியமைத்தது, எதிர் காலத்தில் சமாதானத்துக்கு உதவக் கூடிய ஒரு சிறிய மனிதாபிமானக் கோரிக்கையைக் கூட கருணையுடன் நோக்க முடியாத ஜனாதிபதி மிகமோசமான குழப்பம் நிறைந்த இனப்பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறார்? இந்த உணர்வுதான் அச்சமயத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தில் நிலவியது.

அதிசயிக்கத்தக்கவகையில் பாலா அனுபவித்த நெருக்கடியான நிலையிலிருந்து தப்பிக் கொண்டாரென்றும் சிறுநீர்க் குழாயில் ஏற்பட்ட பாதிப்பிலிருந்தும் சமாளித்துக் கொண்டாரென்றும் புதிய இரத்தப் பரிசோதனைகள் தெரிவித்தன.

என்றாலும் சிகிச்சைக்காக பாலா வன்னியிருந்து வெளியேறிச் செல்ல வேண்டுமென்ற அவசியத்தை வைத்தியர்கள் கைவிடவில்லை.

பாலாவின் ஆரோக்கியத்திற்கு சுற்றாடல் மிகப் பாதிப்பாக இருக்கின்றதென வைத்தியர்கள் தொடர்ந்து கவலை தெரிவித்து வந்தனர். பாலாவுக்கு மாற்று சிறுநீரகக் குழாய் பொருத்தும் சிகிச்சை எவ்வளவு காலத்துக்குள் நிறைவு பெறும் என்பதிலும் வைத்தியர்கள் தீர்மானத்துக்கு வரமுடியாதிருந்தனர்.

என்னைப் பொறுத்தளவில் பாலாவின் நாளாந்த உடல் நிலையும் அதைச் சமாளிப்பதும் பயங்கரக் கனவாகவே இருந்து வந்தது. கடுமையான உணவுக் கட்டுப்பாட்டினால் பலவித உணவுகள் தள்ளி வைக்கப்பட்டன. இதனால் அவரது உடலில் எடை பெரிதும் குறைந்து விட்டது.

அடுத்துவரும் பருவ மழைக் காலம் பற்றி நான் அறிந்திருந்தேன். இந்தக் காலத்தில் கடல் பிரயாணம் செய்ய முடியாதபடி கொந்தளிக்கும். இதனால் நாங்கள் மேலும் நான்கு மாதங்கள் வன்னியிலேயே தங்கி பருவக்காலம் மாறும்வரை காத்திருக்க வேண்டியிருக்கும். பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன் பாலா பயணம் செய்யக்கூடிய நிலையிலிருக்கையிலேயே நாங்கள் வன்னியை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்பதில் நான் துடியாயிருந்தேன். என்னுடைய இந்தக் கவலை பிரபாகரனும் மதியும் எங்கள் வீட்டுக்கு வந்தபோது பிரதிபலித்தது. பாலாவின் மிகமோசமான உடல் நிலையை நான் எடுத்துச் சொல்லி வெளிநாட்டில் கொண்டு போய் அவருக்கு அவசரமாகச் சிகிச்சையளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால் பாலாவின் மரணத்தைத் தவிர்க்கமுடியாது என்றும் நான் எனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு எடுத்துச் சொன்னேன். என்னுடைய அவலத்தைப் பார்த்து பிரபாகரன் நிலைமையின் ஆபத்தைப் புரிந்து கொண்டார். பாலாவின் மீது பிரபாகரனுக்கும் அன்பும் மரியாதையும் உண்டு. பாலாவின் நலனில் பிரபாகரனுக்கு என்றுமே கவலையிருக்கிறது. "எனக்குள்ள சக்தியையும் வசதிகளையும் பயன்படுத்தி வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதற்கு பாலா அண்ணனை அனுப்பிவைப்பேன்." என்று கூறி பிரபாகரன் எனக்கு ஆறுதல் சொன்னார். அவர் உடனடியாகவே செயலில் இறங்கினார். தனது சர்வதேச வலைப்பின்னல் ஊடாக பாலாவை வெளிநாட்டுக்குக் கொண்டு செல்வதற்கு, ஒரு கப்பலை ஒழுங்கு செய்யும்படி உஷார்படுத்தினார்.

சில வாரங்களுக்குள் ஆழ்கடலில் எங்கள் கப்பல் எங்களுக்காக நங்கூரமிட்டு நிற்கும் செய்தி எங்களுக்குக் கிடைத்தது.

நாங்கள் எந்நேரத்திலும் பயணமாகலாம் என்ற செய்தியைத் தொடர்ந்து தலைவர்களும் தொண்டர்களும் எங்களுக்குப் பிரியாவிடை கூறுவதற்கு எங்கள் வீட்டுக்கு வந்து குவிந்து கொண்டிருந்தார்கள்.

1999ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி நாங்கள் புறப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருக்க எனது வயிறு இறுகி பசியின்மையும் அதிகரித்துவிட்டது. பாலா வன்னியிலிருந்து வெளியேற வேண்டியது தவிர்க்கமுடியாதது. ஆனால் எனக்கு மக்களையும் போராட்டத்தையும் விட்டுச் செல்வதற்கு மனமேயில்லை. நாங்கள் புறப்படுகின்ற தினம் பிற்பகலில் தமிழ்நிதி வீட்டுக்கு வந்த போது நாங்கள் வெளியேறும் நேரம் வந்துவிட்டதென எனக்குத் தெரிந்து விட்டது. எங்களை கடற்கரைக்கு வழிகாட்டிச் செல்வதற்கு பஜிரோவில் தமிழ்ச்செல்வன் வந்ததும் நேரம் நெருங்கி வந்துவிட்டதென்பதைத் தெரிந்துகொண்டேன். எங்களின் பயணப் பாதையில் வாகனத்தில் எங்களை முல்லைத்தீவுக் கடற் கரையிலுள்ள தனது முகாமுக்குக் கூட்டிச் செல்வதற்கு சூசை வந்த போது நாங்கள் விரைவில் போக வேண்டிய இடத்துக்கு விரைவில் போய்விடுவோம் என்பது எனக்குத் தெரிந்தது. நாங்கள் பிரபாகரன் வருகைக்காகத் தான் காத்திருக்க வேண்டியிருக்கும். கடைசியாக பிரபாகரன் வந்ததும் எங்களை வழியனுப்பிவைத்து



பாலாவுடனும் என்னுடனும் சுருக்கமாகக் கதைத்தார். இருவரிலும் நிலவிய சோகம் வழமையான பகிடி, கிண்டலையும், சிரிப்பையும் மறைத்துவிட்டது. பாலா தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டதால் கடந்த பதினைந்து ஆண்டுகளாக விசுவாசமாகப் பழகிய ஜிம்மி (நாய்) யைக் கவனத்தில் கொள்ளவில்லை. பாலாவின் முகத்தை எதிர்பார்ப்புடன் அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருந்த ஜிம்மி என்ன நினைந்ததோ பஜீரோவின் உள்ளே தாவி, ஏறி முழுசிப் பார்த்துக்கொண்டிருந்தது. ஜிம்மியின் நிலைமையக் கண்டும் சும்மா இருக்க விரும்பாத நான் அதன் தலையைத் தடவிவிட்டு எல்லோரையும் ஒரு தடவை பார்த்து இறுதியாக திருப்பிரபாகரனையும் பார்த்து விடைபெற்றேன். (வளரும்)

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

அச்சுவேலி,நவ.6

அச்சுவேலி, மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவில், நிர்மாணிக்கப்பட்டுள்ள 'சிறுவர் பூங்கா' நாளை புதன் கிழமை திறந்து வைக்கப்படும்.

பழைய மாணவர் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பூங்காவின் திறப்பு விழா சங்கத் தலைவர் நா.மகேந்திரராசா. தலைமையில் நடைபெறும். விழாவில் கோப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஊஞ்சல், சுழல் சக்கரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய 'சிறுவர் பூங்கா' ஒரு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-11)

## விசேட திருப்பலி

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் விமானத் தாக்குதலுக்குள்ளாகிய எட்டு வருட நிறைவு எதிர்வரும் 13ஆம் திகதியாகும்.

இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. அன்று மாலை 4 மணிக்கு யாகப்பர் ஆலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

(க-51.)

### பொதுப் பரீட்சைகளுக்கு இனிமேல்

## தேசிய அடையாள அட்டையை மட்டுமே பயன்படுத்த முடியும்

அச்சுவேலி, நவ. 5

2003 ஆம் ஆண்டிலிருந்து பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு தேசிய அடையாள அட்டையை மட்டுமே பயன்படுத்தவேண்டும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு இதுவரை காலமும் செல்லுபடியாகும் கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) அஞ்சல்மா அதிபரினால் வழங்கப்படும் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் என்பவற்றைப் பயன்படுத்தி வந்தனர்.

இந்த நடைமுறைகள் 2003 ஆம் ஆண்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டு தேசிய அடையாள அட்டை மட்டும் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை நிரூபிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பரீட்சைத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேற்படித்திட்டத்திற்குத் தயாராகும் விதத்தில் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய ஆள் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-11)

## பாடசாலைகளில் கல்விசாரா ஊழியர் கவனத்துக்கு!

தென்மராட்சி, நவ. 6

வடக்கு – கிழக்கு மாகாண பாடசாலையில் தொண்டர் அடிப்படையில் அல்லது பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் அல்லது பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்களின் விவரங்களை வலய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் —

அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை வலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

### புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக

## தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு தயங்கும் ஆளும் கட்சிப் பிரமுகர்கள்

கொழும்பு, நவ. 6

கடந்த திங்களன்று நாரஹேன்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் முக்கிய அரசியல் பிரமுகர்களை இலக்குவைத்து நடத்தப்பட்டது என்ற தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் பலர் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடத் தயக்கம் காட்டி வருகின்றனர் எனக் கொழும்புச் செய்தி ஊடகம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

கடந்த வியாழக்கிழமை திடீரெனக் கூட்டப்பட்ட தேசிய பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது என்றும்— அந்தச் செய்தி ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை —

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து தெளிவான அறிக்கை ஒன்றை அரசு வெளியிட வேண்டும் எனப் பலரும் எடுத்துக் கூறியதாகவும்—

எனினும் அறிக்கையை வெளியிடுவதில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையை அடுத்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்களை தேர்தல் பிரசாரங்களைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுமாறு கேட்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரசாரக் கூட்டங்களைக் குறைத்துக் கொள்ளுமாறு கேட்பது என்றும், பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பாதுகாப்பை உடனடியாக அதிகரிப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அந்தச் செய்தி ஊடகம் மேலும் தெரிவித்தது. (க-7)

## விசாரணைக்குழு கொழும்புக்கு திரும்புகிறது

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் ஆறாவது குழுவினர் இவ்வாரம் கொழும்பு திரும்புகின்றனர்.

இந்த விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு அடுத்த குழுவினர், டிசெம்பர் மாத நடுப்பகுதியிலேயே யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

மக்கள் அக்கறை காட்டாததால் விசாரணைகளை மேற்கொள்வதில் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தற்போது விசாரணைகளை மேற்கொண்டுவரும் சி.ஐ.டி. குழுவினர் தெரிவித்தனர். (க-4)

## யாழ். நகரில் சந்திகள், வீதிகளில் படையினர் திடீர்ச்சோதனை

யாழ்ப்பாணம், நவ. 5

தேர்தல் நெருங்கிக்கொண்டிருப்பதை அடுத்து யாழ். நகரப் பகுதியின் முக்கிய வீதிகள் மற்றும் சந்திகளில் படையினரின் திடீர்ச் சோதனைகள் அதிகரித்துள்ளன. வாகனங்களில் வந்திறங்கும் படையினரே திடீர்ச்சோதனைகளில் ஈடுபடுகின்றனர்.

தீபாவளிப்பண்டிகை யாழ். நகரில் களை கட்டியிருப்பதையடுத்து தற்போது அதிகமான மக்கள் நகருக்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு வருகை தரும் மக்கள் ஒரு சில மணித்தியாலங்களில் நான்கு, ஐந்து இடங்களில் சோதனைக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. (க-4-15)

## புலிகளுடன் பேசி எடுக்கும் முடிவே உறுதியான, நிரந்தர தீர்வாக அமையும்

### திருமலை முதற் கூட்டத்தில் சம்பந்தன்

திருகோணமலை, நவ. 5

"யுத்த நிறுத்தம் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச வேண்டும். நியாயமான நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த வேண்டும். இத்தீர்வு உறுதியான தீர்வாக அமையும். இத்தகைய தீர்வையே முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும்".

— இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி) ஆகியவற்றின் கூட்டு முன்னணி திருகோணமலையில் முதலாவது பிரசாரக்கூட்டத்தை சனிக்கிழமை சிவன் கோயில் முன்றிலில் நடத்தியது.

முதன்மை வேட்பாளரான இரா. சம்பந்தன் மேலும் கூறியதாவது:–

"நாடாளுமன்றப் பதவிகளைத் துறப்பது எமக்குப் புதிதல்ல. தேவையேற்படும் பட்சத்தில் அதனைத் தூக்கி எறிய நாம் தயங்கமாட்டோம். தமிழ் மக்களின் நன்மை கருதி 1983 ஆம் ஆண்டு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் பதவிகளைத் துறந்து வெளியேறியது உலகம் அறிந்ததே.

சிஹல உறுமய போன்ற கட்சிகள் எம்மீது சேறு பூச முனைகின்றன. எமது மக்கள் படும் துன்பங்களை எமது மக்களுக்கான உரிமைகளைக் கேட்கும் போது நாம் நியாயமற்ற முறையில் நடப்பதாகக் கூறமுடியுமா? நமது அடிப்படை உரிமைகளைத்தானே கேட்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரம்தான் அரசு பேசவேண்டும். இதற்கு அமைவாகவே இந்த நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைச் சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெறச் செய்வதற்கு அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பை எவராலும் மறக்க முடியாது.

தமிழ் மக்கள் பிரச்சினைக்கான தீர்வினைக் காண நாடாளுமன்றத்தையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தும் வகையிலேயே தமிழ்க்கட்சிகளான நாம் இணைந்துள்ளோம். இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் நமது சாத்வீகபோராட்டங்களிலும் இணைந்து கொள்வோம்.

— இவ்வாறு கூறினார் சம்பந்தன்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் பேசுகையில் கூறியதாவது:-

சொற்ப நாடாளுமன்ற ஆசனங்களைத் தம்வசம் வைத்திருக்கும் சில கட்சிகள் நாடாளுமன்றத்தையே ஆட்டிப் படைக்கும் நிலை காணப்படுகிறது. பணத்திற்கும் அற்பசொற்ப சலுகைகளுக்கும் நாம் மயங்கிவிடக்கூடாது.

புதியதொரு வரலாற்றைத் தேடும் காலம் எமக்கு வந்துள்ளது. தமிழ்மக்களின் போராட்டத்தை முன்னெடுத்து நியாயபூர்வமான உரிமைகளைப் பெற வேண்டும் — என்றார்.

வேட்பாளர் துரைரெட்ணசிங்கம் உரையாற்றுகையில், "அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும், வேலைவாய்ப்புகளுக்காகவும் நாம் வாக்குகளைச் சிதறடிக்கக்கூடாது" — என்றார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்க முதல்வர் ஸ்ரீகாந்தா "எங்களுடைய வரலாற்றினை நாங்களே எழுத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" — என்றார்.

திருகோணமலை நகரசபை முன்னாள் உறுப்பினர் இ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் க. திருஞானசம்பந்தர், பொ. இராமநாதன், திருமதி கமலா தில்லைநாதன், க. கௌரிமுகுந்தன் ஆகியோரும் உரையாற்றினார். (க)

## கதிர்காமத்தில் அலைமோதும் அரசியல்வாதிகள்!

கதிர்காமம், நவ. 6

கதிர்காமத்தில் தற்போது உற்சவகாலம் இல்லாததால், பக்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால் அங்கு அரசியல்வாதிகளின் கூட்டம் அலைமோதுகிறது.

நாளாந்தம் ஐ.தே. கட்சி, பொ. ஐ. முன்னணி மற்றும் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இங்கு படையெடுத்து வருகின்றனர். (க)

### மானிப்பாய், நவாலி வயல்களில்

## 'குருத்துக் கக்கல்' நோய்க்கு இலக்காகியுள்ள நெற்பயிர்கள்

மானிப்பாய், நவ. 6

அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்து மானிப்பாய், நவாலி போன்ற பகுதிகளில் நெற்பயிர்கள் "குருத்துக் கக்கல்" நோய்க்கு இலக்காகியுள்ளன.

இப் பகுதிகளில் உள்ள வயல்களில் நெற்பயிர்களை மூடிய நிலையில் மழைநீர் காணப்படுவதே இந்த நோய் ஏற்படக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதிகமான மழைநீரின் தேக்கம் காரணமாக இந்தப் பகுதிகளில் நெற்பயிர்கள் முற்றாக அழிவடையும் நிலையை எதிர்நோக்கியிருப்பதாகவும் —

புதிய நாற்றுக்களை நடுகை மேற்கொண்டால் அன்றி விதைப்பு நெல்நாற்றை நம்பியிருக்க முடியாது என்றும்— விவசாயிகள் தெரிவித்தனர். (க-7-90)

## தேர்தல் பணிக்காக 75 பஸ்களை அனுப்பி வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 6

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக 75 பஸ்களை அனுப்பி வைக்குமாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் சு. மணிவாசகன் மத்தியபோக்குவரத்துச் சபையின் தலைவருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தல் பணிகளுக்காக 160 பஸ்கள் தேவைப்படும் என்று யாழ். அரச அதிபர் எமக்கு அறிவித்துள்ளார். ஆனால் வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் தற்போது 85 பஸ்களேசேவையில் ஈடுபடக்கூடிய நிலையில் உள்ளன. 27 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் மூலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது தான் இன்றைய நிலைமை என்று பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய போக்குவரத்துச் சபை 75 பஸ்களை அனுப்பி வைக்காவிடின் தற்போது சேவையில் உள்ள 85 பஸ்களையே தேர்தல் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-180)

## சலரோகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 6

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306B நடத்தும் சலரோகக் கருத்தரங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

[illegible] அருளானந்தம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 'சலரோகத்துடன் நன்றான சுகவாழ்வு', 'சமாதான நீதவான்களின் நன்றான சேவை', 'லயன்ஸ் நன்றான முன்னேற்றம்' ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

மருத்துவபீட மருத்துவர்களும் மாணவர்களும் மற்றும் நீதித்துறை, சட்டத்துறை வல்லுநர்களும் இதில் கருத்துரை வழங்குவர். (க-ரி)

## சமூகக்கல்வி மாகாண மட்ட போட்டிப் பரீட்சை ஞாயிறன்று

பாடசாலை மாணவர்களுக்கான மாகாண மட்ட சமூகக்கல்விப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டை, வினாத்தாள் மற்றும் சுட்டெண் என்பன வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து எடுத்து வரப்படவுள்ளன.

வலய மட்டத்திலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் —

குறிப்பிட்ட தினத்தன்று போட்டியில் பங்குபற்றும் மாணவர்களை பொறுப்பாசிரியர்கள் அழைத்து வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ள இடம், நேரம் பற்றிய விவரங்கள் பின்பு அறிவிக்கப்படும் என்று யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஒரு காதலின் கதை

இலங்கை இனப்பிரச்சினையின் ஆரம்ப காலகட்டத்தை சித்திரிக்கும் நாவல். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை ஒரு கொழும்பு வாரமலரில் தொடர் கதையாக எழுதியது. 182 பக்கங்கள் ரூபா 150/= (94220)

## மணமகன் தேவை

கௌரவமான இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 37வயது, புரர்பூசம் - 1, (அரச உத்தியோகம்) பெண்ணுக்கும் 37 வயது, அனுசம் - 1 பெண்ணுக்கும் மணமகன்கள் தேவை. ஜாதகக் குறிப்பு, விவரங்களுடன் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். பொருத்தமற்றவை மீள அனுப்பிவைக்கப்படும். விள.இல. 1389, மே/பா உதயன். (94199)

## தவறிவிட்டது

கேரதீவு வீதி, நாவற்குழியைச் சேர்ந்த இரத்தினாம்பாள் ஆனந்தசுந்தரம் என்பவரது தேசிய அ.அ. (இல.765602971V), விசேட அ.அ. (இல.091001374) என்பன நாவற்குழியில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சௌபாக்கியா தொலைத் தொடர்பகம், சந்தை முன்பாக, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி T.P.No. 2963 என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (94216)

## இறைச்சிக் கோழிகள் தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் உடன் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு:- க.தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94242)


தீபாவளியை முன்னிட்டு காவேரியில்

SALE SALE

சிறப்புத்தள்ளுபடி தொடரும் மலிவு விற்பனை

காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

14.11.2001 வரை மாத்திரம்.

(C/18986)

SALE SALE


## மணமகள் ஒப்பனை பயிலரங்கு

இந்து, கிறிஸ்தவ, குஜராத்திய மணமகளை அலங்கரிக்கும் முறைகள் அடங்கிய இரண்டு நாள் செயன்முறைப் பயிற்சி

**9 நவம்பர் 2001**
**வெள்ளி காலை 9 மணி முதல்**

☆ பயிற்சி முடிவில் கலந்துகொண்டோருக்குச் சான்றிதழும உண்டு.
☆ பயிற்சிக்குக் கட்டணம் ரூ.300/= மட்டும்.

ஆர்வமுடையோர் கலந்துகொள்க.

(94254)

தாரிகை நுண் கலையகம
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

# பதவி வெற்றிடம்

**உழவு இயந்திர சாரதி:-**

வேலணை கமநல கேந்திர நிலையத்து நான்கு சில்லு உழவு இயந்திர சாரதி பதவிக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:** 8 ஆம் வகுப்பில் சித்தி
**வயது** : 25 - 55 வயது வரை

☆ *சாரதி உரிமம் பெற்றிருக்க வேண்டும்.*

விண்ணப்ப முடிவு திகதி:- 20-11-2001

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:*

பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநல கேந்திர நிலையம்,
வேலணை.

(94264)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 26 . 11 . 1919



இறப்பு 08 . 10 . 2001

## அமரர் சின்னக்குட்டி முத்து

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாக வாழ்ந்தீர்!
*ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (07.11.2001) புதன்கிழமை அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மகன், மருமகள்,
பேரப்பிள்ளை.

நிரந்தர முகவரி:
*மீசாலை வடக்கு,*
*வேம்பிராய்.*

(94251)

தற்காலிக முகவரி:
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

# திரவிய குண விஞ்ஞானம் என்னும் மூலிகை சம்பந்தமான சித்த மருத்துவ நூல் அச்சிடுதல்

**அமரர் வைத்திய கலாநிதி எஸ்.எம்.பொன்னையா** அவர்கள் கொழும்பு அரசினர் ஆயுள்வேதக்கல்லூரியில் (தற்போதைய உள்நாட்டு மருத்துவ நிறுவகம்) சித்தமருத்துவப் பிரிவின் தலைவராகச் சிறந்தமுறையில் கடமையாற்றியவர். அன்னார் தமது பதவிக்காலத்தில் "திரவிய குண விஞ்ஞானம்" என்னும் நூலை கையெழுத்துப் பிரதியாக எழுதியிருந்தார். அந்தப் பிரதிகள் நாவின்னையில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன. ஆயுள்வேத ஆராய்ச்சிகளுக்குப் பொறுப்பான சபை (AYURVEDIC RESEARCH COMMITTEE) மூலிகைகள் சம்பந்தமான விளக்கங்களை உள்ளடக்கிய இந்த "திரவிய குண விஞ்ஞானம்" என்னும் நூலை அச்சிடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்த முயற்சியானது **அமரர் வைத்திய கலாநிதி எஸ்.எம். பொன்னையா** அவர்களைக் கௌரவிக்கும் நோக்கத்தையும் மற்றும் சித்த வைத்தியர்களுக்கும் சித்த மருத்துவ மாணவர்களுக்கும் ஓர் அரிய நூலை அச்சிட்டு வழங்கும் நோக்கத்தைக் கொண்டது. இந்த நூலை அச்சிடுவதற்கான சகல செலவுகளையும் ஆயுள்வேதத் திணைக்களம் ஏற்றுக் கொண்டுள்ளது.

**அமரர் வைத்திய கலாநிதி எஸ்.எம்.பொன்னையா** அவர்களின் பிள்ளைகளுடனோ அன்றி உறவினர்களுடனோ தொடர்பு கொண்டு இந்த விடயத்தை அறிவிக்க அவர்களது விவரங்கள் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே அன்னாரின் பிள்ளைகளோ, உறவினர்களோ தங்கள் அபிப்பிராயங்களை ஆயுள்வேத ஆராய்ச்சி சபையின் அங்கத்தவரான பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி அவர்களுடன் இல.65, கைலாயபிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில தொடர்புகொண்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அறிவித்துக்கொள்ளலாம்.

இந்தக் காலவரையறைக்குள் விவரங்கள் கிடைக்கப்பெறாவிடில் **அமரர் பொன்னையா**வினால் எழுதப்பட்ட 'திரவிய குண விஞ்ஞானம்' என்னும் நூலை அச்சிடும் பணிகளை ஆயுள்வேத திணைக்களம் மேற்கொள்ளும் என்பதை அறியத்தருகின்றேன்.

லால்ரூபசிங்க,
தலைவர்,
ஆயுள்வேத ஆராய்ச்சி சபை,
ஆயுள்வேத திணைக்களம்,
நாவின்னை.

(94258)

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா முதலாம், இரண்டாம் அணி பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான ஆசிரிய நியமனங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-4)


**A/L DAY CLASS**
ஆரம்பமாகியுள்ளது
*Com* - Mr.பசில் B.B.A
*Acc* - Mr.தவா
B.Com (Hons) Acc (Spl.)
SHAMROCK
(C/18989)


## University of Jaffna

**Faculty Of Graduate Studies**
**Master Of Education Examination**
**2000/2001**
**Presentation of Paper**

All candidates are requested to meet the Coordinater M.Ed. Programme on 2001.11.07 (Wednesday) at 3.30 p.m. to discuss the above matter.

REGISTRAR
*University of Jaffna.*
2001.11.05 (C/18987)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லதம்பி கற்பகம்

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லதம்பி கற்பகம் நேற்றுமுன்தினம் (04-11-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் (ஆசிரியர்) அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - யோகாம்பிகை தம்பதியினரின் மருமகளும் ஜெகதாம்பாள், பர்வதகௌரி (கொழும்பு), செல்வராணி (பிரான்ஸ்), சிவநேசன் (பிரான்ஸ்), சிவராசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கந்தசாமி (ஓய்வுபெற்ற லிகிதர்), இராமச்சந்திரன் (கொழும்பு), திருஞானசம்பந்தன் (பிரான்ஸ்), சத்தியலெட்சுமி (பிரான்ஸ்), விஜயலெட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் சகோதரியும் பொன்னம்மாவின் மைத்துனியும் சத்தியமூர்த்தி - சந்திரிகா, கிருஷ்ணமூர்த்தி - ரஜனி, கிருஷ்ணராசா - வனிதா, ஜெயக்குமார் - சுவீதா, சுதாகரன் - விமலினி, கிருஷ்ணகுமார், கிருஷ்ணரூபன், சந்திரகாசன், சந்திரதாசன், விமல்ராஜ், பகிரதி, பாலாஜினி, சசிக்குமார், மோகன்குமார், மதனகுமார், அசோக்குமார், சுகிர்தன், பபிதா, சாருஜன் ஆகியோரின் பேர்த்தியும் அபிராமி, தர்ச்சனா, சாயினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(6-11-2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***93/16,** இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(94255)

தகவல்:-
வி.கந்தசாமி *(மருமகன்)*

## திருமதி கந்தசாமி பொன்னம்மா

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி பொன்னம்மா அவர்கள் 02.11.2001 அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி கந்தசாமி (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லப்பா - பிள்ளைக்குட்டி தம்பதியினரின் மகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தத் தகவலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வட்டு. மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(94256)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரன்மார், பேர்த்திமார்,
பூட்டன்மார், பூட்டிமார்.

## விஸ்வலிங்கம் போஜராஜன்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் தற்போது வசித்தவருமான விஸ்வலிங்கம் - போஜராஜன் நேற்றுமுன்தினம் (2001.11.04) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் இந்திராதேவியின் பாசமிகு கணவனும் கஜன், தீபன் ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிறீஸ்கந்தராஜா, சிதம்பரநாதன், ரவிமன்னன் ஆகியோரதும் மற்றும் சோமநாதன், கிருஸ்ணகுமார் (லண்டன்), காமினிதேவி, மாலினிதேவி (ஆஸ்திரேலியா), சுகந்திரராஜா (சுதன் - கொழும்பு), மணிவண்ணன் (லண்டன்) ஆகியோரது அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் வத்தளையிலுள்ள அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாளை (2001.11.07) புதன்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வி.சுதன்,**
*24B,பறணவத்த,*
*ஹூரவலப்பிட்டிய வீதி,*
*ஹெந்தல,*
*வத்தளை.*
*தொலைபேசி - 938600*

தகவல்:
வ.சி.கேசவன், (மருமகன்)
*கணேசவாசா,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(94261)

## செல்லத்துரை பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்)

மயில உடையாவளவு, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லத்துரை பாலசுப்பிரமணியம் 01.11.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவபாலன் (கனடா), சிவரஞ்சினி (கனடா), சிவராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நமசகுமார் (கனடா), ஜெயசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (07.11.2001) புதன்கிழமை காலை 8மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(C/18992)

தகவல்:
சிவக்கொழுந்து
(மனைவி)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்
M.G.R., லதா, நாகேஷ்
மற்றும் பலர் நடித்த
உரிமைக்குரல்
காட்சிகள்: 10.30, 2, 5 (புதிய நேரம்)
விசேட காட்சி: 5.00 மணிக்கு
09.11.2001 முதல்
இளவரசன்
(C/18920)

நாகம்ஸ் சுன்னாகம்

அஜித்குமார், மகேஸ்வரி,
மணிவண்ணன் நடிப்பில்
நேசம்
(ரீல்ஸ்)
காட்சிகள்:– 11.00, 2.30 (பு.நே.)
(94259)


## செயலமர்வு

தரம் 3, தரம் 4 இல் கணித பாடம் கற்பிக்கும் தென்மராட்சி ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணித செயற்றிட்ட செயலமர்வு நாளை புதன் கிழமை தொடக்கம் பின்வரும் நிலையங்களில் காலை 9 மணிமுதல் நடைபெறும்.

வடமராட்சியில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்,

வலிகாமத்தில் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு.

கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் 'பிறிஸ்டல் போட்', கத்தரிக்கோல், பசை, மதியபோசனம் நிறக்கடதாசிகள், நிறப்பேனாக்கள் என்பவற்றை எடுத்துவருமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## கொழும்பில் பலத்த மழை

நாட்டின் பல பகுதிகளில் நேற்று கடும் மழை பெய்துள்ளது. இன்றும் இடியுடன் கூடிய மழை தொடரும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. நேற்றுக் காலை 8 மணிவரை கொழும்பில் 106 மிலலி மீற்றர் மழை பெய்துள்ளது. கொழும்பில் பெய்த மழையால் பல வீதிகள் நீரில் மூழ்கின. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. (ஐ-4)




தீபாவளியை முன்னிட்டு
சிவம் ரெக்ஸ்ரைல்ஸின்
சிறப்புத் தள்ளுபடி...!

- திருமணப் பட்டுப்புடைவைகள், வேட்டி வகைகள்
- ஆடவருக்கான சேட்டிங்ஸ், சூட்டிங்ஸ் சோக்கோ ஜீன்ஸ், T சேட்
- சிறுவர், சிறுமியர்களுக்கான கவுண், ஸ்கேட் பிளவ்ஸ், பஞ்சாபி வகைகள், சூட் வகைகள்
- நங்கையர்களுக்கான கவுண், வெல்வேட் ஸ்கேட் பிளவ்ஸ்

அனைத்துச் சாறி வகைகளுக்கும்
நாடவேண்டிய ஸ்தாபனம்:-
சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்
கே.கே.எஸ். வீதி (இணுவில்), கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
(C/18994)



நிறைஞ்சனாஸ்
சாங்கானை
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா,
நாகேஷ்
ஆயிரத்தில்
ஒருவன்
(கலர்)
தினசரி: 11.00, 2.30, 5.30
(C/18981)



## சமூக அணி திரட்டாளர் வெற்றிடம்
## Vacancy for Social Mobilisers

யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் வறுமை நிலையில் வாழும் மக்கள் மத்தியில் பணிபுரிவதற்கு சமூக அணிதிரட்டாளர்கள் தேவை.

பின்வரும் தகைமைகள் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1. சமூகவியல் பட்டதாரிகள்
2. 35 வயதுக்குட்பட்டவர்கள்
3. கிராம மட்டத்தில் தங்கியிருந்து வறுமை நிலையில் வாழும் மக்கள் மத்தியில் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான திறமை.

நியமனம் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்காகவும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலவரை நீடிக்கப்படக்கூடியதாகவும் அமையும்.

தெரிவு செய்யப்படும் பணியாளர்கள் யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவையில் ஜீ.ரீ.இசற். யாழ். புனரமைப்புத் திட்டத்தின் சமூக அணிதிரட்டும் பணிகளில் சேவைக்கமர்த்தப்படுவார்கள்.

முழுமையான சுயவிவரத்துடன் விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு 2001, நவம்பர் 15ஆம் திகதிக்கு பிந்தாமல் அனுப்பப்படல் வேண்டும்.

**இணைப்பாளர்,**
**ஜீ.ரீ.இசற்., யாழ்.புனரமைப்புத் திட்டம்,**
**11, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/18993)



பாராட்டி மனமார நன்றி கூறுகின்றோம்

**கெருடாவில் கோட்டை சீமா முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**

மேற்படி ஆலய திருத்தவேலைகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரத்தில், ரூபா தொண்ணூறு ஆயிரத்தை முற்பணமாக-காசோலையாக - தந்து உதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள்,
இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்





வடமராட்சி E.P.D.P.அமைப்பாளர்
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
அவர்களுக்கும்
வல்வெட்டித்துறை E.P.D.P. இணைப்பாளர்
**ச.யோகராசா**
அவர்களுக்கும்

**நன்றி கூறி பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

ஆதீன கர்த்தாவும் திருப்பணிச் சபைத் தலைவரும்,
சின்னத்துரை கதிரவேலு (இரத்தினம்),
கெருடாவில் கோட்டை சீமா முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
(94231)



அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்

# 19ஆவது ஆண்டு மகரஜோதிப் பெருவிழா

(48 நாள்கள் மண்டல பூஜை)

*இடம்* :-ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
(தம்பையா முதலியார் சத்திரம் - கொச்சிக்கடை, சென்.அன்ரனீஸ் மாவத்தை, கொழும்பு-13)
*காலம்* :-கார்த்திகை மாதம் 1ஆம் திகதி (16.11.2001) வெள்ளிக்கிழமை
அதிகாலை 5.30 மணிமுதல் 8.30 மணிவரை

மஹாகணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகும்.
தொடர்ந்து 48 நாள்களுக்கு காலை, மாலை விஷேட அபிஷேகம், பஜனை
பதினெட்டாம்படி விஷேட பூஜை ஆகியன

19ஆவது ஆண்டாக மலையேறும் சபரிமலைக் குருமணி
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
தலைமையில் நடைபெறும்.

*"சாமியே சரணம் ஐயப்பா"*

N.S.மோகன் நாயுடு J.P. (ஸ்ரீவாகப்பணிப்பாளர் - சாஸ்தாபீடம்)
வே.செல்வநாயகம் (யாத்திரைக் குழுச் செயலாளர்)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்,
சர்வதேச இந்துமத குருபீடம்,
(Approved by the Government of Sri Lanka)
751/A, Bloomendhal Road, Colombo-15. Tel: 072-422239

(C/18995)



## A PUBLIC LECTURE

Jointly organized by the Dept. of Geography, University of Jaffna and the National Integration Programme Unit, Sri lanka.

**Prof. Charles Malcom**
(University of Cape Town)
**Dr. Umesh Bawa**
(University of Western Cape Town)
Will speak on
**Truth and Reconciliation Commission: South African Experience**
on
**Wednesday 7th November 2001**
at
**2.30 p.m.**
**Venue: Geography Hall, University of Jaffna.**
ALL ARE WELCOME

Dept. of Geography, University of Jaffna.
NIPU and Dept. of Geography.
(94266)



மலரும் தீபாவளி என்றும் மனதில் ஒளிவீச வாழ்த்துகின்றோம்

தினம் தினம் புதுமையுடன் மலரும்
நாகரீக உலகின் புதுமைமிகு புத்தம்புதிய புடைவைகளை
அறிமுகமாக்கித் தன்னிகரில்லாது விளங்கும்

# ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர்களின் இடவசதி கருதி,
இல.79, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் எமது கிளை ஸ்தாபனம் 05.11.2001 திங்கள் முதல்
இயங்குகின்றது என்பதை அனைவருக்கும்
மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
உங்கள் ஆதரவை நாடும்:

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ
இல. 13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
இல. 79, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(94260)


## மரண அறிவித்தல்

ஸ்ரீமதி
**இராமலிங்கக்குருக்கள் சரஸ்வதிஅம்மா**

வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கக்குருக்கள் சரஸ்வதிஅம்மா நேற்று (05.1 .01) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுழிபுரம் சுப்பையாக்குருக்களின் வளர்ப்பு மருமகளும், வரணி சாவலப்பிட்டி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு காலஞ்சென்ற இராமலிங்கக்குருக்களின் மனைவியும், குஹதாசசர்மாவின் அன்புத் தாயாரும், சாரதாதேவியின் மாமியாரும், சர்வேஸ்வரன் (கல்வியியல் கல்லூரி, வவுனியா), சைலஜா (மாணவி, யா/மெதடிஸ்த பெண் உ.பா.), நிரஜா (மாணவி, யா/மெதடிஸ்த பெண் உ.பா.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை வரணியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சாவலப்பிட்டி,*
*வரணி.*

தகவல்:
பிரம்மஸ்ரீ இ.குஹதாசசர்மா (மகன்)
(94268)

# அமைச்சர் மங்கள சமரவீரவின் வாகன அணியை மறித்துச் சூடு!

கொழும்பு,நவ.6

தெனியாயவில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அமைச்சர் மங்கள சமரவீரவின் வாகன அணிமீது நேற்று அதிகாலை மாலியம்பொடை சந்தியில் வைத்து இனந்தெரியாதோர் நடத்திய தாக்குலில் அமைச்சர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

வாகன அணியை நோக்கித் திடீரென சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் வாகனங்களின் கண்ணாடிகள் சிதறின. அமைச்சர் காயம எதுவும் இன்றித் தப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சி குண்டர்களே இத்தாக்குதலை நடத்தியதாக அரசுத்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

மாயியம்பொட சந்தியில் வீதித் தடைகள் போட்டு அமைச்சரின் வாகன அணி மறிக்கப்பட்டது. அதனை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

உடனடியாக அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவினர் திருப்பிச் சுட்டனர். தாக்கியோர் வாகனம் ஒன்றில் தப்பியோடியுள்ளனர். அந்த வாகனத்தை பாதுகாப்புப் பிரிவினர் கலைத்துச் சென்றனர்.

தப்பியோடிய வாகனம் அக்குரஸ்ஸ நகரில் மின்கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதிலிருந்த எட்டுப்பேர் காயமடைந்தனர்.

- இவ்வாறு அரச தரப்புத் தகவலகள் தெரிவித்தன. (ஐ-4)

# பெயரைத் துலங்கச் செய்யும் பகீரத முயற்சியில் ஜனாதிபதி!

லண்டன்,நவ.6

சர்வதேச ரீதியில் கெட்டுப்போயிருக்கும் தமது பெயரையும் புகழையும் துலங்கச்செய்யும் நோக்குடன் - பிரிட்டனைச் சேர்ந்த - பொதுசனத் தொடர்பு நிறுவனம் ஒன்றின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு கோடி 30 லட்சம் ரூபாவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா செலவிடுகின்றார்.

ஞாயிறு பத்திரிகைச் செய்திகளை மேற்கோள்காட்டி 'த பயனியர்' செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

'வெல் பொட்டிங்கர்' என்ற பொதுசனத் தொடர்பு நிறுவனமே வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலமான இந்தப் பிரசார நடவடிக்கைக்கான கட்டணமாக பத்து லட்சம் ஸ்டேர்லிங் பவுணைப் (ஒரு கோடி 30 லட்சம் ரூபாவை) பெறுகின்றது. (உ)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குரிய வாக்குப் பெட்டிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இயங்கும் வாக்களிப்பு நிலையங்களில் வைக்கப்படும். அவர்கள் அங்கு சென்று வாக்களிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

## பயணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்பகுதிக்குச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் 'பாஸ்' முறைகளையும் -

வவுனியாவில் எரிபொருள் விநியோகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் கெடுபிடிகளையும் -

நீக்குவது குறித்தும் தாங்கள் ஜனாதிபதியுடன் பேசியிருப்பதாகவும், விரைவில் அந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிடும் எனத் தாங்கள் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ)

## மின்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கப்படுவது தெரிந்ததே.

இந்த நடைமுறை அப்படியே தொடர்ந்து அமுலில் இருகக இதறகு மேலதிகமாக இன்று தொடககம் தினமும் முற்பகல் 11 மணி முதல் மாலை 6மணிவரை சகல பிரதேசங்களிலும்-

நள்ளிரவு 12 மணி முதல் மறுநாள் அதிகாலை 5.30 மணிவரை பிரதேச ரீதியாகவும் மின்வெட்டு அமுல்செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்கு எரிபொருள் ஏற்றிவரும் கப்பல்களின் பயண ஒழுங்குகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பதால் கையிருப்பில் உள்ள எரிபொருளின் நிலைமைக்கு ஏற்ற இந்த மின்வெட்டு அமுல் செய்யப்பட இருப்பதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)


தீபாவளியை முன்னிட்டு
சோதி ரெக்ஸ்ரைல்ஸின்
சிறப்புத் தள்ளுபடி...!
❖ திருமணப் பட்டுப் புடைவைகள் ❖ வேட்டி வகைகள்
❖ ஆடவருக்கான சேட், ரீசேட், சோக்கோ ஜீன்ஸ்
❖ சிறுவர் சிறுமிகளுக்கான கவுண், ஸ்கேட் பிளவுஸ், பஞ்சாபி வகைகள், சூட் வகைகள்
❖ நங்கையருக்கான கவுண், வெல்வெட் ஸ்கேட் பிளவுஸ், பஞ்சாபி வகைகள்
❖அனைத்து சாறி வகைகளுக்குமான பிளவுஸ் வகைகள்
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
சோதி ரெக்ஸ்ரைல்ஸ்
இல.14, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. - 2139
பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு:
இல.21C, நவீனசந்தை,
மேல்மாடி, யாழ்ப்பாணம்.
(C/18990)



SALE! SALE!! SALE!!!
சீமாட்டியின் மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை!
சீமாட்டி
Seemati
வரப்போகும் தீபாவளிப் பண்டிகைக்கென பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட தரம்மிக்க புத்தம் புதிய ஜவுளித் தினுசுகள் என்றும் எங்கும் எப்போதும் கிடைக்காத மலிவு விலையில் இப்போது
"சீமாட்டி" புடைவைக் கடலில்
விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன!
ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் ஏற்ற விதம் விதமான, கண்ணைக் கவரும் புதுடிசைன்களில் புதியரக ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள், வேட்டி சால்வைகள், ஒறிஜினல் சாரங்கள், வண்ண வண்ணக் கலரில் உங்கள் எண்ணம் போல தெரிவுசெய்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:
சீமாட்டி புடைவைக் கடல்
சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள், கூறைச் சேலைகள், பட்டுவேட்டிகளுக்கு கைராசியான ஒரே நிறுவனம்
சீமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
இதே மலிவு விற்பனை எமது ஒரே கிளை நிறுவனமான
மங்கை சில்க்
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
என்ற புடைவை அகத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
T.P. 2196
(C/18919)


## எத்தகைய நெருக்கடி வரினும்

# புலிகள் மீதான தடையை அரசு ஒருபோதும் நீக்காது!

## பிரதமர் சொல்கிறார்

கொழும்பு,நவ.6

அரசு எத்தகைய நெருக்கடிகளை எதிர்நோக்கினாலும் விடுதலைப் புலிகள் மீதான தடை ஒருபோதும் நீக்கப்படமாட்டாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வன்செயல்கள் மற்றும் மோசடிகள் மூலம் 17 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்தவர்கள் இன்று ஒழுங்கு, கட்டுப்பாடு பற்றிப் பேசுவது கேலிக்குரியதாகும்.

ஊழல் நிறைந்த ஆட்சியை நடத்திய ஐ.தே.கட்சியினர் லஞ்சம், ஒழுங்கு பற்றியெல்லாம் பேசிவருகின்றனர்.

இவ்வாறு பேசுவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது. ஒழுங்கமைப்புள்ள கட்டுப்பாட்டைப்பற்றி இவர்கள் சிந்திப்பவர்களாக இருந்தால் சதி முயற்சிகளை மேற்கொண்டு லஞ்சம் கொடுத்து நாடாளுமன்றத்துக்கு வந்திருக்க மாட்டார்கள்.

தேர்தல் காலத்தில் தமிழர்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் புலிகள் மீதான தடையை நீக்குமாறும் - அவர்களுடன் பேச்சு நடத்துமாறும் - ஐ.தே.கட்சி கூறிவருகிறது.

ஆனால் எத்தகைய நெருக்கடிகள் வந்தாலும் புலிகள் மீதான தடையை அரசு நீக்காது.

- இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## கொட்டும் மழைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடத்தப்பட்ட மறியற் போராட்டம் காரணமாக யாழ். செயலகப் பணிகள் முற்றாக ஸ்தம்பித்தன.

### அரச அதிபர் திரும்பினார்

போராட்டத்தில் ஈடுபட்டோர் காலை முதல் செயலகத்தின் நுழைவாயில்களை அடைத்துக்கொண்டு நின்றிருந்ததால் யாழ். அரச அதிபர் உட்பட செயலக அதிகாரிகள் முதல் பணியாளர்கள் வரை எவருமே நேற்று உள்ளே செல்ல முடியவில்லை.

மறியற்போரில் ஈடுபட்டோர் மழையையும் பொருட்படுத்தாது அதிகாலை முதலே செயலகப் பகுதியில் கூடினர். காலையில் பணிக்கு வந்த செயலக ஊழியர்கள் உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை. இதனால் அவர்கள் செயலகச் சுற்றாடலில் உள்ள வீதிகளில் ஆங்காங்கே குடைகளுடன் குழுமி நின்றனர்.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் ஆகியோர் உட்பட அதிகாரிகள் பலரும் செயலகத்துக்கு வந்து உள்ளே செல்ல முடியாது திரும்பிச் சென்று யாழ். பிரதேச செயலக பணிமனையில் தங்கியிருந்தனர்.

மறியற்போர் பிற்பகல் வரை நீடித்ததால் செயலக ஊழியர்கள் பலரும் நண்பகலுக்கு முன்னரே வீடுகளுக்குத் திரும்பியதைக் காண முடிந்தது.

### வேட்பாளர்களும் பிரசன்னம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின பிரமுகர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, மேயர் ந.ரவிராஜ், கே.சிவாஜிலிங்கம், ஐ.தே. கட்சி வேட்பாளர் தி.மகேஸ்வரன் மற்றும் சின்னத்துரை குலேந்திரராஜா, ஐக்கிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த க.தேவதாசன் ஆகிய வேட்பாளர்கள் நேற்று செயலகப் பகுதிக்கு வந்து மறியற்போராட்டத்தல் ஈடுபட்டிருந்தோரைச் சந்தித்து உரையாடினர்.

முற்பகல் 11.30 மணியளவில் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் சகிதம் செயலகப் பகுதிக்கு வந்து மறியற்போராட்டத்தில் ஈடுபட்டோரைச் சந்தித்து உரையாடினார்.

"உங்கள் பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். கடந்த ஐந்தாறு வருடங்களாக உங்கள் பிரச்சினைகளில் நானும் பங்கெடுத்து வருகிறேன். அதைப்பற்றி ஜனாதிபதிக்கு ஏற்கனவே தெரிவித்தும் வந்துள்ளேன். தற்பொழுதும் உங்கள் பிரச்சினைகள் அனைத்தையும் எனக்கு எழுத்து மூலமாகத் தந்தால் அதை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பேன்" என்று அரச அதிபர் அங்கு தெரிவித்தார்.

இதனை அடுத்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை பாதுகாவலர் சங்கத்தினர் பிற்பகல் 2மணிக்கு அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தனர்.

★ கைதுசெய்யப்பட்ட மற்றும் காணாமற்போனவர்களின் உண்மை நிலையை அறியத்தர வேண்டும் -

★ பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டவர்களினதும் நாடு முழுதும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களினதும் விவரத்தை வெளியிடவேண்டும் -

★ செம்மணிப் புதைகுழி தொடர்பாக கோப்ரல் ராஜபக்ஷ வெளியிட்ட தகவல்களுக்கு இணங்கவும் தோண்டிஎடுக்கப்பட்ட 18 எலும்புக்கூடுகள் தொடர்பாகவும் - ராஜபக்ஷ உட்பட சில படையினர் வெளியிட்ட தகவல்களை அடிப்படையாக வைத்து செம்மணிப் புதைகுழி வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நடத்தப்பட வேண்டும் -

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது இந்தக் கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பு அரசாங்க அதிபர் பதில் தராதுவிட்டால் யாழ்.செயலகத்தை நிரந்தரமாகச் செயலிழக்கச்செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட நாம் தள்ளப்படுவோம் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9-10-15-17-180-ரி)


ஈசன் கல்வி நிலையம்
கணக்கீடு
A/L 2002 PAPER CLASS
திரு.பாலவாசன் B.B.A.(F.M.Spl.)
செவ்., வியா. : 4.30 p.m.
ஆரம்பம்: 06-11-2001(செவ்.)
(9247)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா பொன்னுத்துரை

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா பொன்னுத்துரை நேற்று (05.11.2001) திங்கட்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், கணேஷ்வரியின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளையின் அன்பு மாமியும், மோகனதாஸ் (பிரான்ஸ்), சிவானந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், ஆரணியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2001) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை, கரையாம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்*

(C/18997)

தகவல்:
க.கணேஷ்வரி
(மகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.